# பூகோளகால மீளாய்வின் சிபாரிசுகள்

# 2017



Organized by:
Civil Society Groups in Sri Lanka
and UPR-Info, Geneva

CSCS

Civil Society Collective in Sri Lank

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூகோளகால மீளாய்வின் சிபாரிசுகள் 2017

2017 நவம்பர் 17
முதல் பதிப்பு ஆங்கில மொழியில்

திருத்தம் செய்யப்படாத ஆவணம்

மனித உரிமை ஆணைக்குழு
பூகோளகால மீளாய்வு தொடர்பான செயற்பாட்டுக் குழு
28வது கூட்டத்தொடர், ஜெனீவா
2017 நவம்பர் 6-17

பூகோளகால மீளாய்வு தொடர்பான செயற்பாட்டுக் குழுவின் ஆவணம்.
இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூகோளகால மீளாய்வின் சிபாரிசுகள் - 2017

முதல் வெளியீடு 2018

மொழிப்பெயர்ப்பு மற்றும் ஒப்பு நோக்குதல்
அன்டனி ஜேசுதாஸன்

அட்டைப் படம் மற்றும் பக்கவடிவமைப்பு
நிஹால் குணசிங்க

வெளியீடு
தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம்
இல.10, மல்வத்த வீதி, நீர்கொழும்பு,
இலங்கை.
தொ.பே +940312239750
மி.அ. nafsosl@gmail.com
இணையத்தளம் : www.nafso-online.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை தொடர்பான பூகோளகால மீளாய்வு மற்றும் இலங்கை நாட்டின் சிவில் சமூக அமைப்புகளின் செயற்பாடுகள் ........................... v

முகவுரை ........................................................................ 01

I மீளாய்வு செயன்முறை அறிக்கையின் சுருக்கம்....... 02

A. மீளாய்வுக்கு உட்படுத்தப்படும் அரசின் சமர்ப்பணம் ...................................... 02

B. இடைச் செயற்பாட்டுக்குக் கலந்துரையாடல் மற்றும் மீளாய்வுக்கு உட்படுத்தப்படும் அரசின் பதில் ...................................................... 02

II இறுதி முடிவுகளும், சிபாரிசுகளும் ............................... 03

III தன்னிச்சையாக வழங்கப்பட்ட உறுதிகள் மற்றும் கடமைப்பாடுகளும்............................................... 37

இணைப்பு
தூதுக் குழுவின் கட்டமைப்பு........................................... 40




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை தொடர்பான பூகோளகால மீளாய்வு மற்றும் இலங்கை நாட்டின் சிவில் சமூக அமைப்புகளின் செயற்பாடுகள்

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை தொடர்பான பூகோளகால மீளாய்வின் மூன்றாவது கூட்டத்தொடருக்கு முகம் கொடுப்பதற்கு இலங்கை அரசாங்கமானது மிகவும் வெற்றி மநோநிலையில் தயாராகிய அதேவேளை அதற்கான விவாதமிக்க காரணிகளும் இல்லாமல் இல்லை. தற்போதைய அரசாங்கம் ஆட்சி அமைக்கின்ற வேளை மகிந்த ராஜபக்ஷ சனாதிபதியின் மனித உரிமை தொடர்பான அறிக்கை மிகவும் பீடனை நிறைந்ததாகவும் மிகவும் மோசமானதாகவும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தமை இதற்கான காரணமாகும். கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்திலிருந்தே சிவில் அமைப்புகள் மற்றும் அதன் செயற்பாட்டாளர்களுக்கு பலவிதமான உயிர் அச்சுறுத்தல்கள் இடம்பெற்று வந்துள்ளன. எனினும் அச்சுறுத்தல்கள் மத்தியிலும் மனித உரிமையை பாதுகாக்கும் நடவடிக்கைகளில் நாம் ஒன்றிணைந்து செயற்பட்டோம். அதற்காக முன்னின்று உழைத்த, முழுமையான அர்ப்பணங்களை வழங்கிய சக செயற்பாட்டாளர்களுக்கும் நாம் எமது கௌரவத்தை வழங்குவதற்கு தயங்குவதில்லை.

புதிய அரசாங்கம் ஆட்சி அமைத்தப் பிறகு மனித உரிமை தொடர்பான செயற்பாடுகள் சரியான திசையை நோக்கி பயணிக்கின்றது என்று யாரேனும் நம்புவார்களெனின் அது ஒரு மூடநம்பிக்கை என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது வாதம். எம்மை பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் எதிர்ப்பார்த்த சுதந்திரம், கருத்துச் சுதந்திரம், அங்குமிங்கும் பயணிப்பதற்கான சுதந்திரம், தமது சொந்த நிலங்களில் மீளக்குறியேறி தமது பாரம்பரிய தொழிலை செய்து வாழ்வதற்கான உரிமையை இந்த அரசாங்கமும் மறுத்திருப்பதே இதற்கு காரணம். இதற்கான பல சாட்சியங்கள் காணப்படுகின்றன. இதற்கிடையில் முன்பு எம்மை துன்பப்படுத்திய நபர் மீள ஆட்சிக்கு வரலாம் என்ற அச்சம் சாதாரண மக்களிடம் மட்டுமல்லாது சிவில் சமூக அமைப்பினரிடமும் காணப்பட்ட போதும் அதன் காரணமாக தற்போது நடைப்பெறுபவைகள் சரியாக நடைப்பெறுகின்ற என்று மௌனிகளாக பார்த்துக் கொண்டிருப்பதற்கு நாம் தயாரில்லை. பாதாள நிலையிருந்து நாட்டை நல்ல நிலைக்கு உயர்த்த வேண்டுமென எண்ணி அர்ப்பணிப்புடன் செயற்பட்ட சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் என்ற வகையில் நாம் விழிப்புடன் செயற்பட வேண்டுமென எதிர்ப்பார்க்கின்றோம். தற்கால அரசாங்கத்தினதும் மனித உரிமைக்கு எதிரான நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென 2016ம் ஆண்டு தீர்மானித்தோம். பூகோளகால மீளாய்வு அறிக்கைக்கான சிவில் சமூக ஒன்றியமும் அதனொரு பிரதிபலனே.

மனித உரிமையானது சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மட்டுமல்ல பொருளாதார மற்றும் கலாச்சார உரிமைகளும் இதற்கு சமமான முறையில் முக்கியத்துவப்படுகிறது என நாம் நம்புகின்றோம். தமது மகன் அல்லது கணவர் வலிந்து காணாமலாக்கப்பட்டதனால் வடக்கில் வாழும் தாய் ஒருவரின் வேதனையை நன்கு உணர்கின்ற நாம், பலாத்காரமாக தமது நிலங்களிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட பானமை மக்களின் வேதனைகளையும் நன்கு உணர்கின்றோம். எம்மைப் பொறுத்தவரையில் இது இரண்டுமே மனித உரிமை மீறல்களாகும். வட பகுதி ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமை மற்றும் கொலைச்செய்யப்பட்டமை மற்றும் தெற்கின் அவுங்கல்ல பகுதியின் கரைவலை மீனவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரையிலிருந்து பலாத்காரமாக விரட்டியடிக்கப்பட்டமை இரண்டுமே மனித உரிமை மீறல்கள். எண்ணெய் விலை அதிகரிப்புக்கு எதிராக சிலாபம் மீனவர்கள் போராடிய போது ஒருவர் கொல்லப்பட்டமை மற்றும் நீர்கொழும்பு களப்பை பாதுகாப்பதற்காக மீனவர்கள் மேற்கொண்ட பாரிய போராட்டம் இவை இரண்டும் மனித உரிமை செயற்பாடுகளாகும். இலவச கல்வியை பாதுகாப்பதற்காக மாணவர்கள் வீதியில் இறங்கி போராடிய போது நாமும் அவர்களுடன் இணைந்து இலவச கல்வியை பாதுகாப்பதற்காக போராடினோம்.

இந்த அடிப்படையில் மூன்றாவது பூகோளகால மீளாய்வுக்கு முகம் கொடுக்க வேண்டுமென தீர்மானித்த நாங்கள் 94 சிவில் சமூக அமைப்புகளை இணைத்துக் கொண்டு சிவில் சமூக அறிக்கை ஒன்றை தயாரிக்கும் கடினமான பணியில் ஈடுபட்டோம். மேற்படி செயற்பாடு கடினமாக அமைந்ததற்கு காரணம் யாதெனில் இலங்கையானது பூகோளகால மீளாய்வு இரண்டிற்கு முகம் கொடுத்துள்ள போதிலும் கடந்த காலம் முழுவதும் மனித உரிமை செயற்பாடுகள் என்பது அரசுக்கு எதிரான செயற்பாடுகள் எனும் கருத்தியல் சமூகமயப்பட்டிருந்த அதேவேளை மனித உரிமைகள் தொடர்பான செயற்பாடானது மனித நேய செயற்பாடுகள் என்ற புரிதலை சமூகமயப்படுத்த முடியாமல் போனமை என்பதை நாம் புரிந்துக்கொண்டோம்.

இப்பணியின் பொருட்டு சிறந்த மக்கள் அடிப்படையைக் கொண்ட பல சமூக அமைப்புக்கள் ஒன்று திரண்டமையின் பெறுபேறாக சமூகத்தில் கீழ் மட்டத்திலிருந்த சமூக கட்டமைப்புகளுக்கும் மனித உரிமை தொடர்பான கருத்தாடலை கொண்டுச்செல்ல நடவடிக்கை எடுத்தோம். அதன் காரணமாக சாதாரண சமூக கட்டமைப்புகளுக்கு பாரிய சமூக புரிதலை ஏற்படுத்த எம்மால் முடிந்தது. அந்தவகையில் நாடு பூராகவும் 10 இடங்களில் குறிப்பாக மாவட்டங்கள் மற்றும் மாகாணங்கள் பிரதிநிதித்தவம்படும் வகையில் கருத்தரங்குகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடாத்தி பூகோளகால மீளாய்வுக்கான தகவல்களை சேகரித்து மனித உரிமை தொடர்பான அறிக்கையை தயாரிக்க முடிந்தது. தேசிய மட்டத்தில் சிவில் சமூக அறிக்கை ஒன்றை தயாரிப்பதற்கு முயற்சித்த போதிலும் அம்முயற்சியானது தோல்வியுற்றதன் காரணமாக நாடு தழுவிய ரீதியில் கருத்தரங்குகளை நடாத்தி தகவல்களை திரட்டினோம் என்பதை இங்கு குறிப்பிட்டு கூற வேண்டும். நாம் மேற்கொண்ட விழிப்பூட்டல்கள் மற்றும் சமூக உயிர்ப்பூட்டல்கள் செயற்பாடுகள் என்பவற்றின் மூலம் 2000கும் அதிகமான மக்களினதும் 94கும் மேற்பட்ட சிவில் சமூக அமைப்புக்களினதும் பங்கேற்புடன் பூகோளகால மீளாய்வு அறிக்கைக்கான சமாந்தர சிவில் சமூக அமைப்புகளின் அறிக்கையை சமர்ப்பிக்க எம்மால் முடிந்தமையியால் மனித உரிமைகள் துறையில் மக்கள் பங்களிப்பு விரிவடைந்தமை மற்றும் சமூகமயமானமையை எம்மால் உணர முடிந்தது. இச்செயற்பாட்டை மேலும் விரிவாக்கி ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இலங்கையில் மனித உரிமை நிலைமைகளை மேம்படுத்துவதற்காக முயற்சிக்கும் கொழும்பில் அமைந்துள்ள வெள்நாட்டு தூதரங்கள் மற்றும் புது டில்லியில் அமைந்துள்ள தூதரங்கள் மற்றும் பல்வேறுப்பட்ட தரப்பினருடன் நாம் முன்னெடுத்த செயற்பாடுகளின் பிரதிபலனாக ஜெனீவாவில் மூன்றாவது பூகோளகால மீளாய்வுக்கான முன் கூட்டத்தொடர்வரை இத் தெளிவூட்டலை முன்னெடுத்து இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் தொடர்பாக கவனத்தை ஈர்த்துக்கொள்ள முடிந்தது.

அதன்பிரகாரம் குறிப்பிட்ட காலப்பகுதியில் மேற்படி செயற்பாடுகளில் எழுச்சியினையும் புரிதலையும் ஏற்படுத்திக்கொள்ள முடிந்தமையானது மனித உரிமை செயற்பாட்டாளர்கள் என்ற வகையில் நாம் பெற்ற சிறந்த வெற்றியாக கருதுகின்றோம். இதுவரை ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருந்த மனித உரிமை தொடர்பான கலந்துரையாடலை கீழ் மட்ட மக்கள் வரைக்கும் கொண்டுச் செல்ல கிடைத்தமையை தன்னடக்கத்துடன் தெரிவிக்கின்றோம். இதுவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலமும் நாங்கள் மேற்கொண்ட பயணம் தொடர்பாக மகிழ்ச்சியடையும் அதேவேளை எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய சவால்களை கூட்டாக வென்றெடுப்பதற்கு அனைத்து சிவில் அமைப்புகளும் கொள்கை ரீதியில் ஒன்றாக பயணிக்க வேண்டுமென நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம். இச்செயற்பாட்டற்கு பங்களிப்பு நல்கிய 94 அமைப்புகளைச் சார்ந்த சிவில் செயற்பாட்டாளர்கள், சிவில் சமூக அமைப்புகள், ஊடக அமைப்புகள், சுற்றாடல் அமைப்புகள் மற்றும் சகல மனித உரிமை அமைப்புகளுக்கும் எமது கௌரவத்தை தெரிவித்துக் கொள்வதோடு தொடர்ந்தும் ஒன்றிணைந்து பயணிப்பதற்கு அழைப்புவிடுக்கின்றோம். அத்தோடு எமது இந்த செயற்பாட்டிற்கு தலைமைத்துவம் எடுத்து செயற்பட்ட சட்டம் மற்றும் சமூக பொறுப்பு அமைப்பு மற்றும் காணி மற்றும் விவசாய மறுசீரமைப்பு இயக்கத்திற்கும், நிதி உதவி வழங்கிய UPR Info அமைப்பிற்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவிக்கின்றோம்.

ஹர்மன் குமார
தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம்

இலங்கை சிவில் சமூக ஒன்றியத்தின் சார்பாக
2018 மாசி 07ம் திகதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

01. பூகோளகால மீளாய்வுக்கான செயற்பாட்டுக் குழுவானது 2017 நவம்பர் 6ம் திகதி மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இலக்கம் 5/1ற்கு அமைவாக உருவாக்கப்பட்டது. இலங்கை தொடர்பாக இம் மீளாய்வானது 2017 நவம்பர் 15ம் திகதி நடாத்தப்பட்ட 16வது கூட்டத்தொடரில் மேற்கொள்ளப்பட்டது. இலங்கைக்கான பிரதிநிதிகள் குழுவின் தலைவராக பாராளுமன்ற உறுப்பினரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சருமான கலாநிதி ஹர்ஷ டி சில்வா நியமிக்கப்பட்டிருந்தார். 2017 நவம்பர் 17ம் திகதி நடத்தப்பட்ட 18வது கூட்டத்தொடரில் இலங்கை சம்பந்தப்பட்ட அறிக்கை செயற்பாட்டுக் குழுவினால் நிறைவேற்றிக்கொள்ளப்பட்டது.

02. 2017 மாசி 13ம் திகதி மனித உரிமைகள் ஆணைக்குழுவானது பின்வரும் பிரதிநிதிகள் குழுவை(ட்ரொய்கா) இலங்கை பற்றிய மீளாய்வினை வசதிப்படுத்துவதற்காக நியமித்தது. புருன்டி, கொரியக் குடியரசு, வெனிசியுலாவின் குடியரசு.

03. மனித உரிமைகள் ஆணைக்குழு தீர்மானத்தின் இணைப்பிலக்கம் 5/1 இன் 15ம் பந்திக்கும் ஆணைக்குழுவின் 16/1இன் 5ம் பந்திக்கும் நேரொத்தாக பின்வரும் ஆவணங்கள் இலங்கையின் மீளாய்வுக்கு வழங்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(a) 15 (a) ( A/HRC/WG6/28/LKA/2) பந்தியின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு எழுத்து மூலமாக சமர்ப்பிக்கப்பட்ட தேசிய அறிக்கை.

(b) 15 (b) (A/HRC/WG.6/28/LKA/2) பந்தியின் பிரகாரம் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பற்றிய ஆணையாளர் அலுவலகத்தனால் (OHCHR) தயாரிக்கப்பட்ட அறிக்கை.

(c) 15 (c) (A/HRC/WG.6/28/LKA/3)பந்தியின் பிரகாரம் (OHCHR) இனால் தயாரிக்கப்பட்ட சராம்சம்

04. பெல்ஜியம், பிரசீல், எஸ்டோனியா, ஜேர்மன், லிஸ்டன்டைன், நோர்வே, போர்த்துகல்,
சுலோவேனியா, சுவீடன், சவீஸ்டர்லாந்து, உருகுவே, ஐக்கிய இராச்சியம் மற்றும் வட அயர்லாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளினால் தயாரிக்கப்பட்ட வினாக்கொத்து ட்ரொய்கா ஊடாக முன்கூட்டியே இலங்கைக்கு முன்வைக்கப்பட்டது. இவ்வினாக்கொத்தினை ரூசுக்கான எக்ஸ்ரா நெற் ஊடாக பரிசீலிக்க முடியும்.

## I. மீளாய்வு செயன்முறை அறிக்கையின் சுருக்கம்

(2017 நவம்பர் 24ம் திகதியளவில் பூர்த்தி செய்யப்படும்.)

### A. மீளாய்வுக்கு உட்படுத்தப்படும் அரசின் சமர்ப்பணம்

### B. இடைச் செயற்பாட்டுக்குக் கலந்துரையாடல் மற்றும் மீளாய்வுக்கு உட்படுத்தப்படும் அரசின் பதில்

05. இடைச்செயற்பாட்டுக் கலந்துரையாடலின்போது 88 பிரதிநிதிகள் கூற்றுக்களை முன் வைத்ததோடு கலந்துரையாடல் இடம்பெற்றுவரும் வேளையில் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் அறிக்கயின் இரண்டாம் பகுதியில் தரப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## II. முடிவுகளும் அத்தோடு பரிந்துரைகளும்

06. செயற்பாட்டுக் குழுவின் அங்கத்தவர்களுக்கிடையில் நடைபெற்ற உரையாடலின் போது முன்மொழியப்பட்ட பரிந்துரைகள் கீழே தரப்பட்டுள்ளன. இவை இலங்கை பிரதிநிதிகளினால் பரிசீலிக்கப்பட்டுள்ளதோடு அவர்களின் ஆதரவையும் பெற்றுள்ளன.

6.1. மரண தண்டனையை இல்லாதொழிப்பதை இலக்காகக் கொண்ட சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயத்தின. இரண்டாவது விருப்ப நெறிமுறையை அங்கீகரித்து ஏற்றுக்கொள்வதற்கு அவதானம் செலுத்தப்படல் வேண்டும். (உருகுவே)

6.2. சித்திரவதைகள், ஏனைய கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடத்துகை அல்லது தண்டனை வழங்கல் தொடர்பான சர்வதேச சமவாயத்தின. விருப்ப நெறிமுறையை அங்கீகரித்து ஏற்றுக்கொள்ளல் வேண்டும். (போலந்து, உருகுவே, டென்மாக்)

6.3. சித்திரவதைகள், ஏனைய கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடத்துகை அல்லது தண்டனை வழங்கல் தொடர்பான சர்வதேச சமவாயத்தின. விருப்ப நெறிமுறையை அங்கீகரித்து ஏற்றுக்கொள்ளல் வேண்டும். (செனகல்)

6.4. சித்திரவதைகள், ஏனைய கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடத்துகை அல்லது தண்டனை வழங்கல் தொடர்பான சர்வதேச சமவாயத்தின. விருப்ப நெறிமுறையை அங்கீகரித்து ஏற்றுக்கொள்ளல் வேண்டும். (நியுசீலந்து)

6.5. சித்திரவதைகள், ஏனைய கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடத்துகை அல்லது தண்டனை வழங்கல் தொடர்பான சர்வதேச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமவாயத்தின். விருப்ப நெறிமுறையை அங்கீகரித்து ஏற்றுக்கொள்ளல் வேண்டும். (கானா)

6.6. சித்திரவதைகள், ஏனைய கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடத்துகை அல்லது தண்டனை வழங்கல் தொடர்பான சர்வதேச சமவாயத்தின. விருப்ப நெறிமுறையை அங்கீகரித்து ஏற்றுக்கொண்டதன் பின் செயற்படுத்தப்படல் வேண்டும். (பெரிய பிரித்தானியா மற்றும் வட அயர்லாந்துடனான ஐக்கிய இராஜ்யம்)

6.7. சித்திரவதைகள், ஏனைய கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடத்துகை அல்லது தண்டனை வழங்கல் தொடர்பான சர்வதேச சமவாயத்தின. விருப்ப நெறிமுறையை அங்கீகரிக்க அவதானம் கொள்ளல் வேண்டும். (ஆப்கானிஸ்தான்)

6.8. சித்திரவதைகள், ஏனைய கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடத்துகை அல்லது தண்டனை வழங்கல் தொடர்பான சர்வதேச சமவாயத்தின. விருப்ப நெறிமுறையை அங்கீகரிக்க அவதானம் கொள்ளல் வேண்டும். (ஐவரி கோஸ்ட்)

6.9. சித்திரவதைகள், ஏனைய கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடத்துகை அல்லது தண்டனை வழங்கல் தொடர்பான சர்வதேச சமவாயத்தின் விருப்ப நெறிமுறையையும், அங்கவீனத்துடனான நபர்களின் உர்மைகள் தொடர்பான சமவாயத்தின் விருப்ப நெறியையும் துரிதமாக அங்கீகரித்தல் வேண்டும். (கவுத்தமாலா)

6.10. சட்டத்துக்கு புறம்பான கைதுகள் மற்றும் சித்திரவதைகள், ஏணைய கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடத்துகை போன்றவற்றுக்கு எதிரான பாதுகாப்பை உறுதிசெய்வதோடு சித்திரவதைகள், ஏணைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடத்துகை அல்லது தண்டனை வழங்கல் தொடர்பான சர்வதேச சமவாயத்தின. விருப்ப நெறிமுறையை அங்கீகரித்தல் வேண்டும். (தென் ஆபிரிக்கா)

6.11. மனித உரிமைப் பேரவையுடனும் அதன் பொறிமுறைகளுடனுமான ஒத்துழைப்பை வலுப்படுத்துதல் வேண்டும். (மியன்மார்)

6.12. ஐக்கிய நாடுகள் சபையின் விசேட பொறுப்புகளை ஏற்றுள்ளவர்களில் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வதற்காக வேண்டுகோள் விடுத்து காத்திருப்பவர்களின் வேண்டுகொள்கல் தொடர்பாக சாதகமான பதில்கள் வழங்கப்படல் வேண்டும். (லட்வியா)

6.13. உயிர் வாழ்வதற்கான உரிமை, எவ்வித அடிப்படையிலுமான எல்லாவிதமான பாகுபாடுகளையும் இல்லாதொழித்தலுக்கான உத்தரவாதத்தை வழங்கும் புதிய மனித உரிமை சட்டத்தை உள்ளடக்கக்கூடியவாறு அரச யாப்பு சீர்திருத்த நடவடிக்கைகள் தொடருதல் வேண்டும். (தென் ஆபிரிக்கா)

6.14. மனித உரிமைகளை அபிவிருத்தி செய்வதற்கும், பாதுகாப்பதற்கும் தேவையான பூரணமான கட்டமைப்பை ஏற்படுத்தும் வகையில் அரச யாப்பு சீர்திருத்த நடவடிக்கைகள் தொடருதல் வேண்டும். (வியட்நாம்)

6.15. எல்லா மக்களினதும் அடிப்படை உரிமைகளை உத்தரவாதப்படுத்தும் வகையில் அரச யாப்பு சீர்திருத்த நடவடிகடகையை தொடருவதோடு, தேசிய மனித உரிமை செயட்திட்டத்தில் திட்டமிட்டவாறு சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கு முன்நோக்கி நகர்த்துதல் வேண்டும். (மெக்சிகோ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6.16. இலங்கை மனித உர்மை ஆணையத்திற்கு போதுமான நிதியும், மனித வளங்களும் கிடைப்பது உறுதி செய்யப்படல் வேண்டும். (பிலிப்பைன்ஸ்)

6.17. பரிஸ் கோட்பாடுகளுக்கு முழுமையாக இணங்கக்கூடிய வகையில் மனித உரிமை ஆணையம் செயற்படுவது உறுதிசெய்யப்படல் வேண்டும். ( ஆப்கானிஸ்தான்)

6.18. தேசிய மனித உரிமை செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு மேலதிக முயற்சிகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். (மியன்மார்)

6.19. தேசிய மனித உரிமை செயற்திட்டம் நிறைவேற்றப்படுவதற்கும், அதனைத் தொடர்ந்து செயற்படுத்தப்படுவதற்குமான முயற்சிகள் தொடருதல் வேண்டும். (பாகிஸ்தான்)

6.20. அபிவிருத்தியின் பங்குதாரர்களுடன் சேர்ந்து செயற்பட்டு தேசிய மனித உரிமை செயற்திட்டம் செயற்படுத்தப்படுவதற்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படல் வேண்டும். (பிலிப்பைன்ஸ்)

6.21. குறிப்பாக மாகாண மட்டங்களிலும் தேசிய மனித உரிமை செயற்திட்டம் பயனுறுதியுள்ள வகையில் செயற்படுத்தப்படுவதற்குப் போதுமான வளங்கள் கிடைப்பது உறுதிசெய்யப்படல் வேண்டும். (சிங்கப்பூர்)

6.22. தேசிய மனித உரிமை செயற்திட்டம் செயற்படுத்தப்படுவதற்கான முயற்சிகளைத் தொடருதல் வேண்டும். (சூடான்)

6.23. எல்லா அரச நிறுவகங்கள் மற்றும் எல்லா பொருத்தமான பங்குதாரர்களும் தேசிய மனித உரிமை செயற்திட்டம் பற்றி பூரணமாக விளங்கிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வதற்கும், சமூகத்தில் பலவீனமான குழுக்கள் உட்பட எல்லா மக்களும் பயன்பெறக்கூடியவாறும் தேசிய மனித உரிமை செயற்திட்டம் பயனுறுதியள்ள வகையில் செயற்படுத்தப்படுதல் வேண்டும். (தாய்லாந்து)

6.24. 2017-2021 கால தேசிய மனித உரிமை செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காக எல்லா மட்டங்களிலுமுள்ள அரச நிறுவகங்களுக்கும் புரிந்துணர்வை ஏற்படுத்தி வலுப்படுத்துவதன் மூலம் அரச கொள்கைகளில் மனித உரிமைகளை ஒருங்கிணைத்து வலுப்படுத்துதல் தொடரல் வேண்டும். (வெனிசியூலாவின் பொலிவேரியன் குடியரசு)

6.25. தேசிய மனித உரிமை செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்கு ஐக்கிய நாடுகளின் பல்வேறு அங்கங்களுடனும், பொறிமுறைகளுடனும் நெருக்கமான ஒத்துழைப்பை தொடருதல் வேண்டும். (அசர்பைஜான்)

6.26. 2017-2021 கால தேசிய மனித உரிமை செயற்திட்டத்தை செயற்படுத்துதல் வேண்டும். (கியூபா)

6.27. தேசிய மனித உரிமை செயற்திட்டத்தை செயற்படுத்த திட்டமிடப்பட்டுள்ள செயற்பாடுகளுக்கத் தேவையான வளங்கள் வழங்கப்படுதல் உறுதிசெய்யப்படல் வேண்டும். (பெலாரஸ்)

6.28. சமூகத்தில் அடிமட்டத்தில் வாழ்பவர்கள் புதிய கொள்கைகளையும், சட்டதிட்டங்களையும் புரிந்துகொள்வதற்குத தேவையான நடவடிக்கைகள் அதிகரிக்கப்படல் வேண்டும். (எதியோப்பியா)

6.29. கல்வித்துறையின் பாடவிதானத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித உரிமை பற்றிய பாடம் உள்ளடக்கப் படுவதற்கான முன்னெடுப்புகள் தொடருதல் வேண்டும். அது சமூகத்தில் நம்பிக்கையையும், நம்பகத் தன்மையையும் கட்டியெழுப்பவும், அதனூடாக தேசிய மீளிணக்கப்பாட்டை ஏற்படுத்தக்கூடிய சூழலையும் ஏற்படுத்தும். (இந்தியா)

6.30. நாட்டின் எல்லா பகுதியினரிடையேயும் மனித உரிமைக் கல்வியை விரிவுபடுத்துதல் வேண்டும். (புருண்டி)

6.31. இலங்கை ஏற்றுக்கொண்டுள்ள கடமைப்பாடுகளின் அடிப்படையில் பாகுபாடான சட்டங்கள் மற்றும் செயற்பாடுகளை இல்லாதொழிக்கும் முயற்சிகள் தொடருதல் வேண்டும். (எதியோப்பியா)

6.32. பலவீனமான குழுக்களை அவதானத்தில் கொண்டு எல்லா விதமான பாகுபாடுகளையும் இல்லாதொழித்தல் வேண்டும். (செனகல்)

6.33. ஓரங்கட்டப்பட்டுள்ள மற்றும் வலுவிழந்த பகுதியினரின் மனித உரிமைகளை அபிவிருத்தி செய்வதற்கும், பாதுகாப்பதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளல் வேண்டும். (நேபாளம்)

6.34. எவ்விதமான வம்சாவளியை, வயதை அல்லது அடையாளத்தை உடையவராக இருப்பினும், எல்லாப் பிரசைகளினதும், சமூகக் குழுக்களினதும் சமத்துவத்துக்கும், பாகுபாடின்மைக்குமான உரிமைகள் பாதுகாக்கப்படல் வேண்டும். (பொலிவியா பன்மைத்துவ தேசிய அரசு)

6.35. பெண்கள், பெண்பிள்ளைகள் உட்பட எல்லா சிறுபான்மையினருக்கும் எதிராக காட்டப்படும் எல்லா விதமான பாகுபாடுகளையும், வன்செயல்களையும் இல்லாதொழிப்பதற்கும், பெண்களுக்கெதிரான பாகுபாடுகளை இல்லாதொழிப்பதற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்துவதற்கும் மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளல் வேண்டும். (நியுசீலாந்து)

6.36. இனத்துவம், பால் வேறுபாடு, சாதியம் அல்லது வேறுவகையான அடையாளம் கொண்ட குழுக்களின் அடிப்படையில் சமூகத்தில் வாழும் சிறுபான்மைக் குழுக்களுக்கு எதிராக காட்டப்படும் எல்லா விதமான பாகுபாடுகளையும் இல்லாதொழிப்பதை நோக்கமாக்க கொண்டு சட்ட வரையறைகளை வலுப்படுத்தி நடவடிக்ககைள் மேற்கொள்ளப்படல் வேண்டும். (உருகுவே)

6.37. இனத்துவம் மற்றும் பாலுறவுத்தன்மையின் வேறுபாடடைக் குறிப்பாகவும், ஏனையவர்களுக்கும் எதிலாக காட்டப்படும் எல்லா விதமான பாகுபாடுகளையும் தவிர்ப்பதற்கும், இல்லாதொழிப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளல் வேண்டும். (இத்தாலி)

6.38. LGBTI நபர்களுக்கு எதிராக காட்டப்படும காட்டப்படும் பாகுபாடுகள், வன்முறைத்தாக்குதல்கள் தொடர்பாக முறையாக விசாரணை செய்து 9வற்றை இல்லாதொழிப்பதன் மூலம் அவர்களின் உரிமைகளுக்கும், அடிப்படை சுதந்திரத்திற்குமான கௌரவத்தை உறுதி செய்தல் வேண்டும். (ஆர்ஜன்டீனா)

6.39. LGBTI நபர்கள் உட்பட சமூகத்தின் விசேடமான மக்களின் தேவைகள் தொடர்டபாக அவதானம் செலுத்தும் அதேவேளை, HIV/ AIDS பற்றிய விடயம் சார்ந்தது உட்பட, சுகாதாரத் துறையில் காணப்படும் எல்லா விதமாக பாகுபாடுகளையும் இல்லாதொழிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளல் வேண்டும். (போர்த்துகல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6.40. வெறுப்புணர்வை (குரோத உணர்வுகளை) தூண்டுவது மற்றும் வெறுப்புணர்வுகளை அடிப்படையாகக் கொண்டு பேசுவது தடைசெய்வதற்கு முழுமையான சட்டங்கள் ஏற்படுத்தப்படல் வேண்டும். (சீரா லியோன்)

6.41. வெறுப்புணர்வுகளை அடிப்படையாகக்கொ--ண்ட பேச்சுக்களை தடைசெய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளல் வேண்டும். ( டியுனீசியா)

6.42. இனத்துவ மற்றும் சிறுபான்மையினருக்கு எதிரான வெறுப்புணர்ச்சியின் அடிப்படையில் பேசுபவர்களுக்கும், அவர்களுக்கெதிராக வன்செயல்களைத் தூண்டுபவர்களுக்கும் எதிராக தண்டனை வழங்கவும், அவ்வகையான செயற்பாடுகளை தவிர்க்கவும் தேவையான கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். (நமீபியா)

6.43. மத சிறுபான்மையினருக்கு எதிரான மேற்கொள்ளப்படும் வெறுப்புணர்ச்சியின் அடிப்படையிலான பேச்சுக்கள் மற்றும் வன்முறைத் தாக்குதல்களை முறையாக விசாரணை செய்வதோடு, இவ்வகையான செயல்களில் ஈடுபடுவோருக்கு தண்டனை வழங்கவும், இவ்வகையான சம்பவங்கள் இனிமேலும் நிகழ்வதைத் தவிர்ப்பதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். (அவுஸ்திரேலியா)

6.44. விவசாயத்தில் இரசாயனப் பொருட்கள் வெகுவாகப் பாவிக்கப்படுவது தொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். (ஈராக்)

6.45. தங்குதிறனுள்ள அபிவிருத்தி இலக்கை அடையவும், நாட்டு மக்களின் மனித உரிமையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்தி செய்து மற்றும் பாதுகாப்பதற்காகவும், காலநிலை மாற்றத்தினால் எதிர்கொள்ள வேண்டிய சவால்களை வெல்வதை இலக்காகக்கொணடு தேவையான கொள்கைகளை தயாரிப்பதிலும், அவற்றை செயற்படுத்துவதிலும் முன்னேற்றத்தை அடையுமாறு வேண்டப்படுகின்றது. (நிக்கரகுவா)

6.46. சுற்றுச்சூழல் பாதுகாப்பு கொள்கைகளிலும், அனர்த்த முகாமைத்துவ உபாயங்களிலும் மனித உரிமைகளை அபிவிருத்தி செய்வதையும், பாதுகாப்பதையும் ஒருங்கிணைக்குமாறு வேண்டப்படுகிறது. (கியூபா)

6.47. தேசிய மனித உரிமை செயற்திட்டம் செயற்படுத்தப்படும் போது காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் அவதானங்களையும் உள்ளடக்குமாறு வேண்டப்படுகின்றது. (வியட்நாம்)

6.48. தரைமட்டத்தில் வாழ்பவர்களின் நலன்களை இலக்காகக்கொண்டு தங்குதிறனுள்ள அபிவிருத்தியின் இலக்குகளை நடைமுறைகப்படுத்தும் முயற்சியை அனுகுதல் வேண்டும், (பாகிஸ்தான்)

6.49. ஐக்கிய நாடுகளின் 2030 தங்குதிறனுள்ள அபிவிருத்தி இலக்கின் நிகழ்ச்சி நிரலை அடைவதற்கான செயற்திட்ட வரைறைக்குள் முதற் படியாக பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் தொடர்பான அவதானம் செலுத்தப்படல் வேண்டும். (ஐக்கிய அரபு இராஜ்யம்)

6.50. நாட்டின் எல்லா மக்களுக்காகவும் தங்குதிறன் கொண்ட அபிவிருத்தி இலக்குகளை செயற்படுத்துவது உறுதிசெய்யும் முயற்சிகள் தொடருதல் வேண்டும். ( அல்ஜீரியா)

6.51. பயங்கரவாதத்திற்கு எதிராக போராடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கைகளில் மனித உரிமைகளின் அனுகுமுறைகள் வலுப்படுத்தப்படுதல் வேண்டும் (பெரு)

6.52. சர்வதேச தராதரங்களுக்கு அமைவாக பயங்கரவாத்திற்கு எதிரான சட்டங்கள் மீளாய்வு செய்யப்படல் வேண்டும். ( எஸ்டோனியா)

6.53. மரண தண்டனையை இல்லாதொழிப்பதற்கு அவதானம் மேற்கெள்ளப்படல் வேண்டும். (இத்தாலி)
6.54. மரண தண்டனையை இல்லாதொழிப்பதற்கு அவதானம் மேற்கெள்ளப்படல் வேண்டும். (திமோர் லெஸ்டே)

6.55. சித்திரவதைகளை அனுவளவும் சகித்துக்கொள்ளாமைக்கும் அத்தோடு சித்திரவதைகளை தவிர்த்துக்கொள்வதறகான இயலளவை கட்டியெழுப்புவதை ஆழப்படுத்துவதற்குமான நடவடிக்கைகளை உறுதி செய்வதற்கான விதிமுறைகளையும், நிறுவக ரீதியிலான கட்டமைப்புகளையும் வலுப்படுத்துதல் வேண்டும். (இந்தோனீசியா)

6.56. குற்றவியல் விசாரணைத் திணைக்களம், பொலீஸ் மற்றும் இராணுவத்தினரால் தடுத்துவைக்கப் பட்டுள்ளவர்களை விசேடமாகவும், ஏனையோருக்கும் எதிராக சித்திரவதைகளைப் பயன்படுத்துவதை தவிர்ப்பதற்கான முயற்சிகள் வலுப்படுத்தப்படல் வேண்டும். (ஈரான் இஸ்லாமிய குடியரசு)

6.57. பொலீசாரின் வன்முறைப் பிரயோகத்தை தவிர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு, பொலீஸ் படையணி மற்றும் சட்டத்தை செயற்படுத்தும் நிறுவகங்களுக்கும் சித்திரவதைகள், ஏணைய கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடத்துகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது தண்டனை வழங்கல் தொடர்பான புரிந்துணர்வை ஏற்படுத்துதல் வேண்டும். ((சுலோவாகியா)

6.58. (சந்தேக நபர்களிடமிருந்து) வாக்குமூலம் பெறுவதற்காக நடைபெறும் விசாரணைகளின் போது பொலீசார் பயன்படுத்தும் எல்லா விதமான சித்திரவதைகளைளுக்கும், வன்முறைகளுக்கும் எதிராக தண்டனை வழங்கக்கூடிய வகையில் உறுதியான சட்டப் பொறிமுறைகள் ஏறபடுத்துதல் வேண்டும். (மடகஸ்கார்)

6.59. நாட்டில் சனநாயகத்தையும், சட்டத்தின் ஆட்சியையும் உறுதிபடுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள முயற்சிகள் தொடரப்படல் வேண்டும். (நேபாளம்)

6.60. நீதித்துறை மற்றும் சிறைத்துறை முறைமைகளை சீர்திருத்தும் போதும், தேசிய மற்றும் மத சிறுபான்மையினரின் உரிமைகள் தொடர்பாக சட்டங்களைப் பயன்படுத்தும்போதும், மற்றும் சட்டங்கள் இயற்றப்படும் பேதும் சர்வதேச மனித உரிமைகள் தொடர்பான கடமைப்பாடுகளுக்கு அமைவாக செயற்படுத்தப்படுவது தொடரப்படல் வேண்டும். (ரஷ்ய கூட்டரசு)

6.61. குற்றவியல் சட்டக்கோவையில் நபர்கள் காணாமற்போகச் செய்கின்றமையை குற்றமாக ஏற்றுக் கொள்கின்றமை உடபட தேசிய சட்டங்களில் எல்லா நபர்களையும் காணாமற்போகச் செய்கின்றமையிலிருந்து பாதுகாப்பதற்கான சமவாயத்தை இணைத்து அவற்றை முழுமையாகவும், வினைத்திறனுடனம் செயற்படுத்தப்படுவதை முன்னேற்றுமாறும் வேண்டப்படுகிறது. (ஸ்பெயின்)

6.62. எல்லா நபர்களையும் பலவந்தமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணாமற்போகச் செய்கின்றமையிலிருந்து பாதுகாப்பதற்கான சமவாயத்தக்கு அமைவாக நாட்டில் நபர்கள் பலவந்தமாக காணாமற்போகச் செய்கின்றமையை குற்றமாக ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் சட்டங்கள் இயற்றப்படல் வேண்டும். (சுவீடன்)

6.63. காணாமற்போனவர்கள் தொடர்பான செயலகம் முழுமையாக செயற்படக்கூடிய வகையில் சிறந்த தராதரமுள்ள சுதந்திரமான ஆணையர்களை நியமிப்பதோடு, போதியளவு நிதி வளங்களையும் வழங்குதல் வேண்டும். (ஜேர்மனி)

6.64. காணாமற்போனவர்கள் தொடர்பான செயலகம் அதன் பொறுப்புகளை சுதந்திரமாகவும். வினைத்திறனுள்ள வகையிலும் செயற்படுவதற்குத் தேவையான போதியளவு நிதி வளங்களை வழங்கி, உயரிய தராதரங்களுடனான அங்கத்தவர்களையும் நியமித்தல் வேண்டும். (கொலிய குடியரசு)

6.65. பலவந்தமாக காணாமற்போகச் செய்யப்பட்டவர்கள் தொடர்பான விசாரணை ஆணையங்கள், குறிப்பாக கானாமல் போனோர் தொடர்பான முறைப்பாடுகளை விசாரிக்க நியமிக்கப்படட சனாதிபதி ஆணைக்குழு உட்பட, எல்லா ஆணையங்களினதும் அறிக்கைகளை வெளியிடுதல் வேண்டும். (சுவிட்சர்லாந்து)

6.66. பலவந்தமாக காணாமற்போகச் செய்யப்பட்டவர்கள் தொடர்பான வழக்குகளை ஒரு குற்றவியல் சம்பவமாக தேசிய சட்டத்தில் நிர்ணயம் செய்வதற்குத் தேவையான சட்ட விதிமுறைகளை மேற்கொள்ளவும், பலவந்தமாக காணாமற்போகச் செய்யப்பட்டவர்கள் தொடர்பான வழக்குகளை முழுமையாக விசாரணை செய்து அவற்றுக்குப் பொறுப்பானவர்களை சட்டத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன் நிறுத்துவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும். (சுலோவேக்கியா)

6.67. சட்டத்துக்கு புறம்பான தடுத்துவைப்புகள், சித்திரவதைகள் மற்றும் பலவந்தமாக காணாமற்போகச் செய்யப்பட்டமை தொடர்பான முறைப்பாடுகளை பக்கச்சார்பற்றதும், பயனுறுதியுள்ள வகையிலும் ஒரு சுதந்திரமான நிறுவகத்தின் மூலம் விசாரணை செய்வது உறுதிசெய்யப்படுதல் வேண்டும். (இத்தாலி)

6.68. தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களை தடுத்து வைத்திருந்த நிறுவகம், தடுத்து வைக்கப்பட்டிருந்த இடம் போன்ற விபரங்களை பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர் கோரினால் அவ் விபரங்கள் அவர்களுக்கு வழங்கப்படுதல் வேண்டும். (பிரான்ஸ்)

6.69. போர்க் குற்றம் தொடர்பான விசாரணைகளிலும், ஆயுதப்படைகளுக்கு மனித உரிமை பற்றிய பயிற்சியளிப்பதற்கும் சர்வதேச உதவிகளுக்கு இடமளிப்பதை தொடருதல் வேண்டும். (ஈரான் இஸ்லாமிய குடியரசு)

6.70. யுத்த காலத்தில் சிவில் பிரசைகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட துஷ்பிரயோகங்கள் தொடர்பான விசாரணைகள் பூர்த்தியடைவதை உத்தரவாதப்படுத்துதல் வேண்டும். (பிரான்ஸ்)

6.71. ஆயுத முரண்பாட்டைத் தொடர்ந்து இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகளை முறையாக விசாரணை செய்வதற்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கு சட்டரீதியில் நிவாரணம் கிடைக்கக்கூடிய வகையிலும் முழுமையான நடைமுறை ஏற்படுத்தப்படுவது உறுதிசெய்யப்படல் வேண்டும். (சீராலியோன்)

6.72. ஆயுத முரண்பாட்டின் போதும் அதற்குப்பிந்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்திலும் இனம்காணப்பட்ட எல்லா மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவும் சுதந்திரமானதும், பக்கச்சார்பற்ற வகையிலும் விசாரணைகளைத் தொடருவதோடு, குற்றமிழைத்தவர்களுக்கு எதிராக வழக்குகள் தொடருவதற்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கு முறையான நட்டஈடு வழுங்குவதற்கும் உறுதிசெய்தல் வேண்டும். (பாலஸ்தீன அரசு)

6.73. பாதுகாப்புப்படையினரையும், அரச உத்தியோகத்தர்களையும் இந்த மனித உரிமை மீறல்களையும், துஷ்பிரயோகங்களையும் பொறுப்பேற்க வைத்தல் வேண்டும். (அமெரிக்கா)

6.74. முரண்பாட்டின் போது இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்கள் பற்றிய முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகளை ஆழப்படுத்தவும், குற்றமிழைத்தோருக்கு தண்டனை வழங்கவும், பாதிக்கப்பட்டோருக்கு உரிய நட்டஈடுகள் வழங்குதலும் வேண்டும். (ஆர்ஜன்டீனா)

6.75. முரண்பாட்டினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களின் தேவையின் அடிப்படையில் மனவள சமுக உதவிகள் வழங்கப்படுவதற்கான முயற்சிகள் தொடரப்படல் வேண்டும். (ஈராணிய இஸ்லாமிய குடியரசு)

6.76. நேர்த்திறனும், பாதிப்புற்றவர்களை மையப்படுத்தியும், சர்வதேச அனுபவசாலிகளின் ஆதரவைப் பெறக்கூடிய வகையிலும் ஒரு பொறுப்பேற்கும் பொறிமுறை ஏற்படுத்துவதன் மூலம் நிலைமாற்று நீதி தொடர்பான எல்லா கடமைப்பாடுகளையும் பூர்த்தி செய்வதற்கும், காணாமல் போன நபர்கள் பற்றிய செயலகம் சுதந்திரமாகவும், பக்கச்சார்பற்ற வகையில் முழுமையாக செயற்படுவதை உறுதிசெய்தலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். (சுலோவேகியா)

6.77. காணாமல் போன நபர்கள் பற்றிய செயலகத்தை செயற்படுத்துதல், ஒரு உண்மையைக் கண்டறியும் ஆணையம், நட்டஈடு வங்குவதற்கான செயலகம், நீதியை வழங்குவதற்கு விசேடமான சட்டத்தரணிகளைக்கொண்ட சட்டத்துறை பொறிமுறை போன்றவற்றை உள்ளடக்கிய முழுமையான சட்டத்துறை பொறிமுறை போன்றவற்றை உள்ளடக்கிய முழுமையான நிலைமாற்று நீதிக்கான பொறிமுறை ஏற்படுத்தப்படல் வேண்டும். (தென் ஆபிரிக்கா)

6.78. நிலைமாற்று நீதி முறைமை இறுதியில் ஏற்படுத்தப்படுவதை உறுதி செய்யவும். (பிரான்ஸ்)
6.79. காணாமல் போண நபர்கள் பற்றிய செயலகத்தை செயற்படுத்துதல், புதிய பயங்கரவாத தடுப்பு சட்டத்தை நிறைவேற்றல், அத்தோடு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் மக்களுக்கு மேலதிக காணிகளை வழங்குதல் உட்பட மீளிணக்கப்பாடு மற்றும் நிலைமாற்று நீதி தொடர்பான நடைமுறைகள் செயற்படுத்தப்படல் வேண்டும். (தாய்லாந்து)

6.80. உண்மையை கண்டறிதல், நீதி மற்றும் மீளிணக்கப்பாட்டை அடைவதற்கான ஒரு தேசிய பொறிமுறை, நட்டஈடு வழங்குவதற்கான ஒரு செயலகம் உள்ளடங்களாக நிலைமாற்று நீதியை உறுதிசெய்வதற்கான சட்டத்துறை சார்ந்த மற்றும் சட்டத்துறை சாராத நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக அனைத்தையும் உள்ளடக்கக்கூடியதாக ஒரு கட்டமைப்பை ஏற்படுத்துதல் வேண்டும். (பெல்ஜியம்)

6.81. நிலைமாற்று நீதிக்கான முறைமையை ஏற்படுத்தும் நடவடிக்கையை துரிதப்படுத்துவதோடு, அந்நடைமுறை பெண்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமபங்கேற்றலுடனதாகவும், பயிற்றப்பட்ட நபர்களை கொண்டதாகவும், பலியல் வல்லுறவுகள் மற்றும் பெண்களுக்கெதிரான வன்முறைகள் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்வதாகவும் அமைவதோடு அதன் தீர்ப்புகள் வெளிப்படை தன்மை கொண்டதாகவும், பகிரங்கத்தன்மை கொண்டதாகவும் அமைதல் வேண்டும். (மெக்சிகோ)

6.82. சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்போடு மீளிணக்கப்பாடு நோக்கிய முயற்சியை தொடருவதோடு அம்முயற்சியில் எல்லா பங்குதாரர்களையும் முழுமையாக ஈடுபடுத்துதல் வேண்டும். (ஜப்பான்)

6.83. மீளிணக்கப்பாடு மற்றும் தேசிய ஐக்கியத்தை வலுப்படுத்துவது நோக்கிய முயற்சிகளை முன்னெடுப்பதோடு உள்நாட்டில் புலம்பெயர்ந்தவர்கள் தாம் இருந்த இருப்பிடங்களுக்கு மீண்டும் திரும்பி வந்து மீள்குடியேறுவது, முன்னைநாள் போராளிகளின் சமூகப் புணர்வாழ்வு மற்றும் மீளிணக்கப்பாடு போன்ற போருக்குப் பிந்திய விடயங்கள் தொடர்பான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படல் வேண்டும். (நிக்கரகுவா)

6.84. தேசிய மீளிணக்கப்பாட்டினை அடைவதற்கான முயற்சிகள் தொடரப்படல் வேண்டும். (பேரு)

6.85. தேசிய மீளிணக்கப்பாட்டினை அடைவதற்கான முயற்சிகளை வலப்படுத்துவது தொடரப்படுவதோடு நிலைமாற்ற நீதியை அடைவதையும் உறுதி செயதல் வேண்டும். (கட்டார்)

6.86. மீளிணக்கப்பாடு, பொறுப்பேற்றல் மற்றும் மனித உரிமைகள் பேன்றவற்றை அபிவிருத்தி செய்யும் முயற்சிகள் துரிதப்படுத்தப்பட்டு தொடருதல் வேண்டும். இவற்றுக்கு மேலாக, தேசிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னெடுப்புகள் மூலம் மீளிணக்கப்பாடு தொடர்பான தேசிய கொள்கைகள் ஏற்படுத்தப்படல் வேண்டும். (பிரேசில்)

6.87. ஐ.நா. மனித உரிமை பேரவையின் தீர்மானம் 30/1க்கு அமைவாக சத்திய ஆணையத்தையும், சட்டத்துறை பொறிமுறையையும், நட்டஈடு வங்குவதற்கான செயலகத்தையும் ஸ்தாபிப்பதற்கு தேவையான சட்டத்துறை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். (அயர்லாந்து)

6.88. ஐ.நா. மனித உரிமை பேரவையின் தீர்மானம் 30/1 விளக்கப்பட்டுள்ளதற்கு அமைவாக சத்திய ஆணையத்தையும், சட்டத்துறை பொறிமுறையையும், நட்டஈடு வங்குவதற்கான செயலகத்தையும் ஸ்தாபிப்பதற்கு தேவையான சட்டத்துறை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். (ஜேர்மனி)

6.89. மனித உரிமை பேரவையின் 30/1 தீர்மாணத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளவாறு மீளிணக்கப்பாடு மற்றும் ஏனைய சீர்திருத்த செயட்திட்டங்களை கால தாமதமின்றியும், தொடர்ச்சியான முன்னேற்றத்துடனும் செயற்படுத்தல் வேண்டும். (நியுசீலாந்து)

6.90. மனித உரிமை பேரவையின் 30/1 தீர்மானத்தின் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்ட கடமைப்பாடுகளை முழுமையாக செயற்படுத்துதல் வேண்டும். (அமெரிக்கா)

6.91. மனித உரிமை பேரவையின் 30/1 தீர்மாணத்தின் கடமைப்பாடுகளை முழுமையாக செயற்படுத்துதல் வேண்டும். (அவுஸ்திரேலியா)

6.92. தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் மீளிணக்கப்பாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் ஆகிய அமைச்சுகள் மூலம் தேசிய மீளிணக்கப்பாடு தொடர்பான செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் தொடர்ச்சியான முன்னேற்றம் ஏற்படுத்தப்படல் வேண்டும். (வெனிசியூலா பொலிவேரியன் குடியரசு)

6.93. ஆயுத போராட்டத்துக்கு பிந்திய காலத்தின் நிலையான பதிலிருப்பாக அமையும் விதத்தில் தேசிய மீளிணக்கப்பாட்டு நடைமுறைகள் வலுப்படுத்தப்படுவதற்கான முயற்சிகள் தொடரப்படல் வேண்டும்.

6.94. சிறுபான்மை மதக்குழுக்கள் மற்றும் சிறுபான்மை இனக்குழுக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் வன்செயல்கள் மற்றும் அச்சுறுத்தல்களை தவிர்ப்பதன் மூலமும், அவ்வகையான குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களுக்கெதிராக வலுவான வகையில் வழக்குகளை தொடர்ந்து உரிய தண்டனையைப் பெற்றுக்கொடுப்பதன் மூலம் தேசிய மீளிக்கப்பாட்டு செயற்பாடுகளை முன்னெடுப்பது தொடரப்படல் வேண்டும். (ஹோலி ஸீ)

6.95. போர்க் குற்றங்களுக்குப் பலியானவர்களினதும், சாட்சியங்களினதும் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் அத்தோடு நட்டஈடு வழங்குவதற்குமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படல் வேண்டும். (ஏகிப்து)

6.96. சாட்சிகளினதும் மற்றும் குற்றத்திற்குப் பலியானோரினதும் விடயங்கள் தொடர்பாக ஏற்படுத்தப்படும் கட்டமைப்புகளின் சுதந்திரத்தையும், நேர்மைத்திறனையும் உறுதி செய்வதற்கு அவற்றுக்கான மேலதிக நிதி 2018 வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கப்படல் வேண்டும். (ஜேர்மனி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6.97. மதங்களின் சுதந்திரத்தையும், மதங்களுக்கிடையிலான உரையாடலையும் பாதுகாப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளல் வேண்டும். (இத்தாலி)

6.98. மதங்களினதும், நம்பிக்கைகளினதும் சுதந்திரத்திற்கான உரிமையையும், கௌரவத்தையும் உறுதி செய்தல் வேண்டும். (மடகஸ்கார்)

6.99. சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சமவாயத்தின் கடமைப்பாட்டின் அடிப்படையில் மதங்களினதும் நம்பிக்கைகளினதும் சுதந்திரம் பாதுகாக்கப்படுவது உத்தரவாதப்படுத்தப்படுவதற்கான முயற்சிகள் அதிகரிக்கப்படல் வேண்டும். (பெல்ஜியம்)

6.100. மதங்களுக்கெதிரான வன்செயல்களையும், வெறுப்புணர்வுகள் பரப்பப்படுவதையும் தவிர்ப்பதற்கு பல்வேறு மதக்குழுக்களுக்கிடையில் காத்திரமான உரையாடல்களை ஆர்வப்படுத்துவதன் மூலம் மதங்களுக்கிடையேயான தோழமை வலுப்படுத்தப்படல் வேண்டும். (நெதர்லாந்து)

6.101. எல்லா பிரசைகளினதும், குடியிருப்பாளர்களினதும் மத சுதந்திரத்திற்கான உரிமைகளை உத்தரவாதப்படுத்துவற்காக தற்போதைய சட்டங்களையும் செயற்பாடுகளையும் வலுப்படுத்துவதோடு மத ரீதியில் மேற்கௌள்ளப்படும் வன்செயல்களில் ஈடுபடும் எல்லோருக்கும் எதிராக குற்றப் பத்திரிகை தாக்கல் செய்து தண்டனை வழங்கப்படுதல் வேண்டும்.

6.102. சிறுபான்மை மத அங்கத்தவர்களுக்கு எதிரான வன்செயல்களில் அல்லது துன்புறுத்தும் செயல்களில் ஈடுபடுவோர் சட்டத்தின் முன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பேற்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளல் வேண்டும். (அமெரிக்கா)

6.103. சிறுபான்மை மதங்களின் அங்கத்தவர்களுக்கு எதிரான வன்செயல்கள் மற்றும் துன்புறுத்தல்கள் தொடர்பாக தண்டனங்களை வெளிப்படுத்துவதுடன், குற்றம்செய்த எல்லோரையும் காலதாமதமின்றி சட்டத்தின் முன் நிறுத்தப்படுதல் வேண்டும். (நெதர்லாந்து)

6.104. சிவில் சமூக ஆர்வளர்களினதும். ஊடகவியளாளர்களையும் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கு தேவையான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்வதோடு அவர்களுக்கெதிராக மேற்கொள்ளப்படும் தாக்குதல் சம்பவங்கள் தொடர்பாக விசாரணை செய்யப்படல் வேண்டும். (பாலஸ்தீன அரசு)

6.105. சிவில் சமூக ஆர்வளர்களினதும், மனித உரிமைக் காப்பாளர்களினதும் பாதுகாப்பையும், அதற்கான உகந்த சூழலையும் ஏற்படுத்துதல் வேண்டும். (நோர்வே)

6.106. பொலிசாருக்கு மனித உரிமைகள் பற்றிய பயிற்சிகள் வழங்குவது உட்பட, பெண் மனித உரிமைக் காப்பாளர்களுக்குப் போதிய பாதுகாப்பு நடவடிக்கைகளை உறுதி செய்வதன் மூலம் அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளக் கூடிய துன்புறுத்தல்கள் அல்லது வன்செயல்கள் தொடர்பாக பயப்படாமல் சமூகத்தில் முழுமையாக ஈடுபடக்கூடிய நிலைமையை உறுதிசெய்தல் வேண்டும். (பின்லாந்து)

6.107. மனித உரிமைக் காப்பாளர்களுக்கு போதியளவு பாதுகாப்பையும், அவர்களுக்கெதிராக மேற்கொள்ளப்படும் வன்முறைத் தாக்குதல்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையாக விசாரிப்பதற்கும், பொறுப்பானவர்கள் சட்டரீதியில் தண்டிக்கப்படுவதையும் உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளல் வேண்டும். (அயர்லாந்து)

6.108. ஆட்கடத்தல்களை தடுப்பதற்கும் இவ்விடயம் தொடர்பான உபாயத்திட்டத்தை செயற்படுத்துவதற்கான எல்லாத் தேவைகளையும் வழங்குதல் வேண்டும். (கட்டார்)

6.109. நபர்கள் கடத்தப்படுவதை தவிர்ப்பதற்கான உபாய செயற்திட்டங்களை செயற்படுத்தும் முயற்சிகள் தொடருதல் வேண்டும். (சூடான்)

6.110 ஆட்கடத்தலை முறியடிப்பதற்கான இலங்கையின் தேசிய செயற்திட்டத்தின் ஓரங்கமாக வியாபார நிறுவனங்கள் அவர்களது விநியோக வலையமைப்பில் வெளிப்படைத் தன்மையை உறுதிசெய்யும் முயற்சியை பகிரங்கமாக அறிவிப்பதை உறுதி செய்யும் விதத்தில் சட்டங்கள் அறிவிக்கப்படுவதற்காக அவதானம் செலுத்தப்படல் வேண்டும். (பெரிய பிரித்தானியா மற்றும் வட அயர்லாந்து உட்பட ஐக்கிய இராச்சியம்)

6.111 ஆட்கடத்தலுக்கு பழியானவர்களுக்கு நட்டஈடு மற்றும் புனர்வாழ்வு உட்பட வழுவான நிவாரணங்கள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் வலுப்படுத்தப்படல் வேண்டும் (ஆர்மேனியா)

6.112 பொருளாதார, சமூக, கலாசார உரிமைகளை மக்கள் முழுமையாக அனுபவிப்பதை இலக்காகக் கொண்ட நடவடிக்கைகள் வலுப்படுத்தப்படல் வேண்டும். (தென்னாபிரிக்கா)

6.113 பொருளாதார, சமூக, கலாசார உரிமைகளுக்கான செயற்குழு போன்ற அதாள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடன்படிக்கைகளுக்கான கட்டமைப்புகளின் பரிந்துரைகளை செயற்படுத்துவதனூடாக வர்த்தகம் மற்றும் சிவில் நடவடிக்கைகளில் இராணுவம் ஈடுபடுவதை முடிவுக்குக் கொண்டுவருதல் வேண்டும். (ஆஸ்திரியா)

6.114 பொருளாதார மற்றும் சமூக ரீதியான தங்குதிறன்கொண்ட அபிவிருத்தியையும் வறுமைக் குறைப்பையும் அவிபிருத்தி செய்வதை தொடர்வதனூடாக நாட்டு மக்கள் அவர்களின் எல்லா மனித உரிமைகளையும் அனுபவிப்பதற்கான திடமான அடித்தளத்தை ஏற்படுத்துதல் வேண்டும். (சீனா)

6.115 மிகவும் வசதி குறைந்த மற்றும் ஓரங்கட்டப்பட்ட குழுவினர் உட்பட எல்லா நபர்பளுக்கும் நன்மை ஏற்படும் விதத்தில் சமூகக் காப்புறுதி முறைமை அமைக்கப்பட்டு வலுப்படுத்துதல் தொடர்தல் வேண்டும். (மாலைத்தீவு)

6.116 தங்குதிறன் கொண்ட அபிவிருத்தியின் இலக்கு தொடர்பான செயற்திட்டத்தினுள் மோசமான வறுமையை இல்லாதொழிப்பதற்கான முயற்சிகள் தொடரல் வேண்டும். (மொரோக்கோ)

6.117 வறுமையைக் குறைப்பதற்குத் தேவையான எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படல் வேண்டும். (சவுதி அரேபியா)

6.118 வறுமையை இல்லாதொழிப்பதற்கான முயற்சியை ஆர்வப்படுத்துவதும், பிராந்தியங்களுக்கு இடையிலான சமத்துமற்ற நிலைமைக்கு தீர்வு காணப்படுவதற்கும் ஏதுவான நடைமுறையாக கிராமசக்தி செயற்திட்டத்தை விரிவுபடுத்தல் அல்லது தேவைப்படுமேயானால் புதிய முன்னெடுப்புகள் மேற்கொளள்ளல் உட்பட தரிசனம் (ஏளைமைெ) ஐ முழுமையாக நடைமுறைப்படுத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சிங்கப்பூர்)

6.119 அறிக்கையின் 87ம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள படி 2030ம் ஆண்டிற்குள் இலங்கையில் வறுமையை ஒழிப்பதற்காக உகந்த கொள்கைகளை தொடருதல் வேண்டும் (ஐக்கிய அரபு இராச்சியம்)

6.120 மிகவும் பலவீனமான பகுதியினர் உட்பட இலங்கை மக்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதை இலக்காகக் கொண்டு வறுமைக்கு எதிரானப் போராட்டத்தில் சாதகமான சமூக கொள்கைகளை நடைமுறைப்படுத்தப்படுதல் தொடருதல் வேண்டும் (வெனிசுவேலா பொலிவேரிய குடியரசு)

6.121 சுகாதாரம், கல்வி மற்றும் வீடமைப்புத் திட்டங்கள் மூலம் வறுமை ஒளிப்பதற்கான முயற்சிகள் தொடரப்படுவதோடு பலவீனமான குழுக்களின் மனித உரிமைகள் உறுதி செய்வதற்குத் தேவைகளை உகந்த சட்டங்கள் அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும். (பூட்டான்)

6.122 2030ம் ஆண்டளவில் வறுமையை ஒழிப்பதை இலக்காகக் கொண்டு, வறுமையை நீக்குவதற்கான நாட்டில் தேசிய கொள்கை நடைமுறைப்படுத்தபடுவதை ஆர்வப்படுத்தல் வேண்டும் (புரூனை தாரூசலாம்)

6.123 பிரதானமாக கிராமிய பிரதேசத்தில் வாழும் பெண்கள் உட்பட பெண்களின் வருவாயை பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பான விசேட திட்டங்களை உருதிப்படுத்தப்படல் வேண்டும். (ஹொன்டுராஸ்)

6.124 பெண்கள் தலைமைத்தாங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தினரும், உள்ளூரில் புலம்பெயர்ந்தவர்களும் உளவள சமூக மற்றும் வாழ்வாதார உதவித்திட்டங்களிலும் அத்தோடு நிலையான போதுமான வீடுகளைப் பெற்றுக் கொள்வதற்கு ஏதுவான செயற்திட்டங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதை உறுதி செய்வது உட்பட நலன்புரி மற்றும் முன்னேற்ற செயற்திட்டங்களுக்கும் பயன்படக் கூடிய வகையில் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் தொடர்பான தகவல் தளம் ஒன்று உருவாக்கப்படல் வேண்டும் (பின்லாந்து)

6.125 நாட்டு மக்கள் கல்வி, சுகாதாரம், தொழில்வாய்ப்பு மாற்றும் உணவு போன்ற உரிமைகளுக்கு சிறந்த பாதுகாப்பை வழங்க சாதகமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் தொடரப்படல் வேண்டும் (சீனா)

6.126 சுகாதாரம் மற்றும் வைத்திய சேவைகளில் அடித்தளக் கட்டமைப்புகளின் அபிவிருத்தியையும் இயலளவைக் கட்டியெழுப்புவதையும் முன்னெடுப்பதற்கான செயற்பாட்டு நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டும். (ஜப்பான்)

6.127 பெருந்தோட்டப் பிரதேசங்களில் தரமான சுகாதாரம் மற்றும் கல்வி சேவைகளை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான போதுமான வளங்களை ஒதுக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். (ஈரான் இஸ்லாமிய குடியரசு)

6.128 பெல்ஜிங் மகாநாட்டின் செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில் பாலியல் மற்றும் இனவிருத்தி சுகாதாரத்திற்கான வாய்ப்புகளை உறுதிசெய்வதற்குத் தேவையான எல்லா சட்ட மற்றும் அரசியல் நடவடிக்கைளும் 2030 நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாக மேற்கொள்ளப்படல் வேண்டும். (ஹொராண்டஸ்)

6.129 பெண்கள், பிள்ளைகள், அங்கவீனமானவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உட்பட பல்வீனமானவர்களின் கல்விக்காக சமவாய்ப்புகள் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். (லாவோ மக்கள் சனநாயகக் குடியரசு)

6.130 பிரஜைகளின் சொத்துக்களுக்கும், அவர்களின் வாழ்வாதாரத்திற்கும் உத்தரவாதத்தை உறுதி செய்து பாதுகாப்புத்துறையினர் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுவதை தடைசெய்வதனை குறிப்பாகக் கொண்டு பாதுகாப்புத் துறை மீதான ஜனநாயக கட்டுப்பாட்டை வலுப்படுத்தல் வேண்டும். (சுவிட்சலாந்து)

6.131 இராணுவம் கைப்பற்றியுள்ள நிலங்களை உரியவர்களிடம் திருப்பிக் கொடுப்பதற்கும் நில உரிமையாளர்களுக்கு திருப்தியான நட்ட ஈடு வழங்கவும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படல் வேண்டும் (பிரான்ஸ்)

6.132 உள்ளூரில் புலம்பெயர்ந்த நபர்களின் உடனடித் தேவைகளை பூர்த்திசெய்வதற்காக காணி சட்டங்களை மீளாய்வு செய்ய அவதானம் செலுத்தப்படல் வேண்டும். (ஜோர்ஜியா)

6.133 நில அபகரிப்பு தொடர்பான குற்றச்சாட்டுக்களை அவதானத்தில் கொண்டு கைப்பற்றப்பட்டுள்ள தனியார் காணிகளை அவற்றின் சட்ட ரீதியான உரிமையாளர்களிடம் ஒப்படைக்கும் நடைமுறையினை கனிசமான அளவு அதிகரிப்பதற்குத் தேவையான எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படல் வேண்டும். (ஹெய்ட்டி)

6.134 பெண்களின் உரிமைகளை அபிவிருத்தி செய்யவும், பாதுகாக்கவும் நேர்மையான கொள்கைகள் உருவாக்கப்படல் வேண்டும் (பிரான்ஸ்)

6.135 அரசாட்சியின் எல்லா மட்டங்களிலும் மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கை வகுப்புகளிலும் இளைஞர்களுக்கு தொழிற்திறன் பயிற்சி வழங்குதல், நீதியை நாடுவதற்கான வாய்ப்பை அதிகரித்தல் மற்றும் சட்டத்துறை சீர்திருத்தம் அத்தோடு பெண்களின் தேவைகளை நிறைவேற்ற முன்வரல் உட்பட பெண்களின் உரிமைகளை முன்னேற்றுவதை ஆழப்படுத்துதல் வேண்டும். (இந்தோனீசியா)

6.136 பெண்களை வலுப்படுத்தவும், பெண்களுக்கு எதிரான பாகுபாடுகளையும், வன்செயல்களையும் இல்லாதொழிப்பதை விரிவுபடுத்துவதற்கான முயற்சிகள் தொடர்தல் வேண்டும். (டியூனீசியா)

6.137 இலங்கையின் உள்ளூர் முறைமைக்குள் (ஐ.நாவின்) பெண்களுக்கெதிரான சகல விதமான பாகுபாடுகளையும் இல்லாதொழிப்பதற்கான சமவாயம் முழுமையாக உள்ளடக்கப்படல் வேண்டும் (நோர்வே)

6.138 எல்லா சட்டமூலங்களும் முழுமையாக மீளாய்வு செய்வதன் மூலம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையில் சமத்துவம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். (கவுதமாலா)

6.139 உள்ளூர் சட்டங்களை மீளாய்வு செய்து அவற்றில் காணப்படும் பெண்களுக்கு எதிரான பாகுபாட்டு அம்சங்களை நீக்குதல் வேண்டும். (லட்வியா)

6.140 வழங்கப்பட்டுள்ள காணிகளின் அனுமதிப் பத்திரம் அல்லது நன்கொடையாக வழங்கப்பட்ட காணிகளை (குடும்பத்திலுள்ள) ஏனையவர்கள் உரிமையாக்கிக் கொள்ளுதல் தொடர்பாக சட்டம் மற்றும் முஸ்லிம் திருமண சட்டத்தில் திருமணத்திற்கான குறைந்த வயதெல்லை இன்மை உட்பட பெண்களுக்கும் ஆண்களுக்குமிடையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமத்துவத்தை உத்தரவாதப்படுத்தும் நோக்கில் உள்ளூர் சட்டங்களை மீளாய்வு செய்வதனை பொறுப்பேற்பதற்கான அவதானம் கொள்ளப்படல் வேண்டும். (கானா)

6.141 நிலத்தை சொந்தக்காரர்களின் உடமையாக்கி கொள்ளல் குடும்பத்தின் மூத்த தலைமுறையினரின் சொத்துக்களை உரித்தாக்கிக் கொள்ளல் மற்றும் காணிகளை வைத்திருத்தல் தொடர்பான விடயங்களில் பெண்களுக்கு எதிராகக் காட்டப்படும் பாகுபாடான செயற்பாடுகளை இல்லாதொழித்தல் வேண்டும். (ஸ்பெயின்)

6.142 அடுத்த தலைமுறையினர் குடும்ப சொத்துக்களை உரித்தாக்கிக் கொள்ளுதல் உட்பட அசையாத சொத்துக்களை விற்பனை செய்தல், திருமணத்திற்கான குறைந்த வயதெல்லையை நிர்ணயம் செய்தல் போன்ற விடயங்கள் உட்பட ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலான சமத்துவம் மீறப்படல் தொடர்பான தாக்கங்களை ஏற்படுத்தும் உள்ளூர் சட்டங்கள் மீளாய்வு செய்யப்படல் வேண்டும். (போர்த்துக்கல்)

6.143 காணி அனுமதிப்பத்திரம் மற்றும் நன்கொடையாக வழங்கப்பட்ட காணிகளை அடுத்தத் தலைமுறையினர் உரிமையாக்கிக் கொள்ளுதல், அவ்வாறான சொத்துக்களை விற்பனை செய்தல் அத்தோடு அரசியல், பொருளாதார, பொது வாழ்வில் பெண்களின் சம பங்கேற்றலுக்கான தடைகள் உட்பட பெண்களுக்கெதிரான பாகுபாடுகளை ஏற்படுத்தும் உள்ளூர் சட்டங்கள் மீளாய்வு செய்யப்படல் வேண்டும். (நமீபியா)

6.144 பெண்களுக்கு எதிரான பாகுபாடுகளை நீக்குவதற்கும் பால்நிலை சார்ந்த அடிப்படையில் மேற்கொள்ளப்படும் வன்செயல்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாதொழிப்பதற்குமான முயற்சிகள் தொடரப்படல் வேண்டும். (லாவோ மக்கள் ஜனநாயக குடியரசு)

6.145 பெண்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழிப்பதை இலக்காகக் கொண்ட முயற்சிகள் தொடரப்பட வேண்டும். (ஜோர்ஜியா)

6.146 பால்நிலையை அடிப்படையாகக் கொண்ட வன்முறைகளை இல்லாதொழித்தலுக்கான போராட்ட முயற்சிகள் முன்னெடுக்கப்படல் வேண்டும். (சவுதி அரேபியா)

6.147 தேசிய மனித உரிமை செயற்திட்டம், பாலியல் மற்றும் பால் நிலையை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் வன்செயல்களை தீர்ப்பதற்கான தேசிய செயற்திட்டம் ஆயுத முரண்பாட்டின் போது மேற்கொள்ளப்படும் பாலியல் வல்லுறவுகளை தவிர்ப்பதற்கான பிரகடனம் போன்றவற்றிற்கு அமைவாக பாலியல் மற்றும் பால் நிலையின் அடிப்படையில் நிலவும் வன்செயல்களை தவிர்ப்பதற்க்கான உபாயங்கள் வடிவமைக்கப்பட்டு செயற்படுத்தப்படல் வேண்டும். இதில் பாதிக்கப்பட்டவர்களின் உளவளப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நடவடிக்கைகளை உள்ளடக்குதல் வேண்டும். (பெரிய பிரித்தானியா மற்றும் வட அயர்லாந்து உட்பட ஐக்கிய இராச்சியம்)

6.148 திருமணம் தொடர்பான வன்செயல்கள் குற்றச்செயல்களாக கருதப்படுவதோடு பால் நிலைச் சார்ந்த வன்செயலுக்கு எதிராக போராடுவதற்கும் அவற்றைத் தவிர்ப்பதற்கும் பூரணமான உபாயங்கள் வகுக்கப்படல் வேண்டும். (ஹொன்டூரஸ்)

6.149 பெண்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் எல்லா வகையான வன்செயல்களையும் இல்லாமல் செய்வதற்கான நடவடிக்கைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொள்ளப்படுவது தொடரப்படுவதோடு குடும்ப வன்செயல்களை தவிர்ப்பதற்கான தட்டத்தை திருத்தும் நடவடிக்கைகள் தீர்மானிக்கப்பட்டு செயற்படுத்தப்படுவது துரிதப்படுத்தப்படல் வேண்டும். (மாலைத்தீவு)

6.150 பால் நிலையை அடிப்படையாக் கொண்ட வன்செயல்கள் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதற்கான தேசிய செயற்திட்டத்தை தொடர்ச்சியாகவும் பயனுறுதியுடனும் செயற்படுத்த தொடரும் காலங்களில் போதுமான வளங்களை வழங்குதல் வேண்டும் (மலேசியா)

6.151 பால்நிலை அடிப்படையில் வன்செயல்கள் தொடர்பான வழக்குகளை கையாளும் அதிகாரிகளுக்கு பால்நிலை தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படுவதை தொடருதல் வேண்டும் (மலேசியா)

6.152 பாதுகாப்புப் படையினரால் மேற்கொள்ளப்படுகின்ற வன்செயல்கள் தொடர்பான குற்றச்சாட்டுகளை விசாரணை செய்வதைத் துரிதப்படுத்தி குற்றவாளிகளாகக் காணப்படுவோருக்கு எதிரான வழக்குகள் தொடரப்பட்டு தண்டனை பெற்றுக்கொடுப்பது உறுதி செய்தல் வேண்டும். (டிமோர் லெஸ்தே)

6.153 பெண்களின் உரிமைகளை அபிவிருத்தி செய்யவது மற்றும் பாதுகாப்பது, முரண்பாட்டின் போது நிகலும் பாலியல் வன்செயல்களுக்கு முடிவு கட்டுவது மற்றும் அவ்வாறான குற்றம் இழைத்தவர்கள் தண்டனைகளை பெறுவதிலிருந்து பாதுகாக்கும் செயற்பாடுகளை நிறுத்துவது போன்றவை உறுதி செய்யப்படல் வேண்டும். (எகிப்து)

6.154 பெண்களுக்கும் பெண்பிள்ளைக்கும் நீதியைப் பெற்றுக்கொள்ளக் கூடியமையை நோக்கமாகக் கொண்டு எல்லா பொலிஸ் நிலையங்களிலும் பெண்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவை ஸ்தாபித்து விசாரணை செய்வதற்காக பிரத்தியேக அறைகளை ஏற்படுத்துவது, போதுமான பெண் பொலிஸ் உத்தியோகஸ்தர்களை நியமிப்பது போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். (ஹய்டி)

6.155 பொது வாழ்விலும், அரசியல் வாழ்விலும் பெண்களின் பங்கேற்பை அதிகரித்தலும் பெண்களுக்கு எதிரான பாகுபாடான சட்டங்களை சீர்திருத்தம் செய்தலும் வேண்டும். (ஈராக்)

6.156 தீர்மானங்களை எடுக்கும் நடைமுறையில் பெண்களின் பங்கேற்பைப் விருத்தி செய்வதையும், அவர்களை வலுப்படுத்தலையும் அவர்களின் குடும்பம் மற்றும் சமூக வாழ்வில் எதிர் நோக்கும் பாகுபாடுகளை இல்லாமல் செய்வதற்கான செயற்திட்டங்கள் தொடர்தல் வேண்டும். (லிபியா)

6.157 பெண்களின் உரிமைகளை அபிவிருத்தி செய்வதற்கும் பாதுகாப்பதற்குமான முயற்சிகள் தொடரப்படுவதோடு அவர்கள் அரசியலில் பங்கேற்பதை ஆர்வப்படுத்துவதை இலக்காகக் கொண்டு ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் வலுப்படுத்தப்படல் வேண்டும் (மொரோக்கோ)

6.158 அரசாட்சியின் எல்லா மட்டங்களிலும் பெண்களின் முழுமையானதும் சமமானதுமானதும் பங்கேற்றலை அபிவிருத்தி செய்வதை நோக்காகக் கொண்ட நிலையான கொள்கைகள் முன்னெடுக்கப்படல் வேண்டும். (நோர்வே)

6.159 பெண்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான நிகழ்ச்சி நிரலை செயற்படுத்துவதன் ஊடாக எல்லாத் துறைகளிலும் தீர்மானம் எடுக்கும் நடைமுறைகளில் பெண்களின் பயனுறுதியுடனான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்கேற்றல் உறுதிசெய்யப்படல் வேண்டும். (ஸ்பெய்ன்)

6.160 அரசியல் மற்றும் பொது வாழ்வில் பெண்களின் பங்கேற்றலையும், பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களில் தொழில் வாய்ப்புக்களையும் அவர்களின் சமூக பொருளாதார நிலைமைகளையும் முன்னேற்றிச் செல்வதற்கான வாய்ப்புகளை பெற்றுக்கொள்ளக் கூடியவாறு அவர்களுக்கு உதவிகள் அதிகரிக்கப்படல் வேண்டும். (பஹ்ரெய்ன்)

6.161 சிறுவர்களின் உரிமைகளை வலுப்படுத்துவதன் மூலம் அவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான நியாயமான பொறிமுறையை ஏற்படுத்துவதன் மூலமும், சிறுவர்களுக்கு எதிரான எல்லா வகையான பாகுபாடுகளை இல்லாதொழிக்கவும் திட்டவட்டமான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட வேண்டும் (ஈக்வடோர்)

6.162 சிறுவர்களைப் போன்று விசேடமாக பலவீனமான சூழலில் வாழும் நபர்கள் சட்டமுறைமையும் ஏனைய முறைபாட்டு நடைமுறைகளையும் அர்த்தமுள்ள வகையில் நாடுவதை உறுதி செய்வதற்காக விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் (பஹ்ரெய்ன்)

6.163 இனத்துவம் மற்றும் பொருளாதார நிலைமைகளின் அடிப்படையில் சிறுவர்களுக்கு எதிராகக் காணப்படும் பாகுபாடுகள் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். (ஈராக்)

6.164 பெண்கள் சிறுவர்கள் மற்றும் இனத்துவ சிறுபான்மையினர் ஆகியோர்களின் உரிமைகள் பயனுறுதியான வகையில் பாதுகாப்பதற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சிகள் தொடரப்பட வேண்டும். (போலந்து)

6.165 வீடுகள் உட்பட எல்லா இடங்களிலும் சிறுவர்கள் உடலியல் ரீதியாக தண்டிப்பது தடைசெய்யப்படல் வேண்டும். (மொன்டிநேக்ரோ)

6.166 சிறுவர்களை பாதுகாப்பதற்கும், சிறுவர்களை வேலைக்கமர்த்துவதை தடைசெய்வதற்குமான முயற்சிகள் தொடரப்படல் வேணடும் (டியுனீசியா)

6.167 அங்கவீனமான நபர்கள் கல்வி, தொழில், பொது போக்குவரத்து, சுகாதாரம், அரசியல் பங்கேற்பு போன்ற துறைகளில் வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ளல் உறுதி செய்யப்படல் வேண்டும். மற்றும் அவர்களுக்கு எதிரான சட்டங்களையும் விதிமுறைகளையும் இல்லாதொழித்தல் வேண்டும். (மெக்சிகோ)

6.168 அங்கவீனத்துடனான நபர்களின் நலன்புரித் திட்டங்களுக்காக போதுமான நிதி வழங்கப்படுவது தொடருதல் வேண்டும் (அசர்பைஜான்)

6.169 அரச சேவையில் அங்கவீனமான நபர்களை தொழிலுக்கு அமர்த்தப்படுவதை அதிகரிப்பதற்கான முயற்சிகள் தொடருதல் வேண்டும். (புருணை தருஸ்ஸலாம்)

6.170 அங்கவீனமான நபர்களின் கல்வி மற்றும் சுகாதார முறைமை போன்ற துறைகளில் காணப்படும் பலவீனங்களை நீக்குவதற்கு பயனுள்ள வகையில் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படல் வேண்டும். (ஜப்பான்)

6.171 பொருளாதார, சமூக, கலாசார உரிமைகள் உட்பட எல்லா உரிமைகளையும் தமிழ் மக்கள் முழுமையாக அனுபவிக்கும் வகையில் அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பான பாதுகாப்பு செயற்திட்டங்களும், கொள்கைகளும் தொடரப்படுதல் வேண்டும். (பெரு)

6.172 தீர்மானம் எடுக்கும் நடைமுறையில் சிறுபான்மையினரின் பயனுள்ள பங்கேற்றலுக்கான விசேட அவதானத்தை மேற்கொள்வது, பொருளாதார, சமூக ரீதியில் சமமான அவகாசங்களை வழங்குவது மற்றும் இன, மொழி, மத தனித்துவங்களை நாட்டில் முழுமையாக ஒருங்கிணைப்பதை உறுதி செய்யக்கூடியவாறான செயற்பாடுகளையும், நிறுவகங்களையும் ஏற்படுத்துவது போன்ற நடடிவக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். (குவாதமாலா)

6.173 எல்லா நாடு கடந்த தொழிலாளர்களினதும், அவர்களது குடும்ப அங்கத்தவர்களினதும் உரிமைகளை பாதுகாப்பது தொடர்பான சர்வதேச சமவாயத்துக்கு அமைவாக நாடு கடந்த தொழில்களையும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்களையும் பாதுகாப்பதற்காக இலங்கை நாடு கடந்த தொழிலாளர் அதிகாரசபை சட்டத்தை நிறைவேற்றுவதை துரிதப்படுத்தப்படல் வேண்டும் (இந்துனேசியா)

6.174 ஒழுங்கற்ற குடியேற்ற வாசிகளையும் குறிப்பாக அவர்களின் குடும்பத்தினரையும் பிள்ளைகளையும் தடுத்து வைப்பதற்காக மாற்று வழிவகைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். (போர்த்துக்கல்)

6.175 தேசிய மட்டத்தில் கிடைக்கக் கூடிய கல்விச் சேவைகளுக்கான வாய்ப்பு, புகலிடம் கோருபவர்களுக்கும், அகதிகளுக்கும் கிடைக்கக் கூடியவாறு நாட்டின் கொள்கைகள் பலப்படுத்தப்படல் வேண்டும். (ஹோலி ஸீ)

6.176 எஞ்சியுள்ள புலம்பெயர்ந்த நபர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது இருப்பிடங்களுக்குத் திரும்புவதையும் மீள் குடியேற்றப்டுவதையும் உறுதி செய்வதற்கான மேலதிக முயற்சிகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். (அசர்பைஜான்)

6.177 முரண்பாட்டினால் பாதிக்கப்பட்ட மற்றும் புலம்பெயர்ந்தவர்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கும் அவர்களின் புலம்பெயர்வு தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு காத்திரமான தீர்வுகளைத் தேடுவதற்கான நடவடிக்கைகள் வலுப்படுத்தப்படல் வேண்டும். (எகிப்து)

7. கீழே தரப்பட்டுள்ள ஊடாடும் வகையில் நடத்தப்பட்ட உரையாடலின் போது உருவான பரிந்துரைகள் இலங்கையினால் பரிசீலிக்கப்பட்டதோடு இலங்கையினால் கவனத்தில் கொள்ளப்பட்டுமுள்ளது

7.1 மரண தண்டனையை இல்லாதொழிப்பதை இலக்காகக் கொண்ட சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமுதாயத்தின் இரண்டாவது விருப்ப நெறிமுறையை கையொப்பமிட்டு அங்கீகரித்தல் வேண்டும் (மொன்டீநேக்ரோ, ஸ்பெய்ன்)

7.2 சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச சமவாய்ததின் இரண்டாம் விருப்ப நெறிமுறையை அங்கீகரிக்க வேண்டும். (போலந்து)

7.3 சிவில் மற்றும் அரசியல் உரிமைகளின் சர்வதேச சமவாயத்தின் இரண்டாவது விருப்ப நெறிமுறையை அங்கீகரிப்பது உட்பட எல்லா சூழ்நிலைகளிலும் மரண தண்டனை பயன்படுத்தப்படுவது நிறுத்தப்படுவதோடு மரண தண்டனையை இல்லாதொழிக்க நடவடிக்கை எடுத்தலும் வேண்டும். (நியூசிலாந்து)

7.4 1951ம் ஆண்டின் அகதிகளின் அந்தஸ்த்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பான சமவாயத்தையும் அதன் 1967ம் ஆண்டின் நெறிமுறையையும் அங்கீகரிப்பதற்கு அவதானம் செலுத்தப்படல் வேண்டும் (ஐவரிகோஸ்ட்)

7.5 ரோம் நியதிச் சட்டமான சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தையும் அத்தோடு சித்திரவதைகள் கொடூரமான, மனிதாபிமானமற்ற, இழிவுபடுத்தும் நடத்துகை அல்லது தண்டனை வழங்குதல் சமவாயத்தின் விருப்பு நெறிமுறையையும் அங்கீகரக்கவும், சித்திரவதையைத் தவிர்ப்பதற்கான தேசிய பொறிமுறை ஒன்றை ஸ்தாபிப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளல் வேண்டும் (ஆஸ்திரியா)

7.6 சிறுவர் உரிமை பற்றிய சமுதாயத்தின் தொடர்பாடல் நடைமுறை அங்கவீனத்துடனான நபர்களின் உரிமைகள் தொடர்பான சமவாயம் மற்றும் பொறிமுறை, சமூக மற்றும் கலாசார உரிமைகள் பற்றிய சர்வதேச சமவாயம் போன்றவற்றின் விருப்ப நெறிமுறைகளை அங்கீகரித்தல் வேண்டும். (ஸ்லோவாக்கியா)

7.7 அங்வீனத்துடனான நபர்களின் உரிமைகள் பற்றிய சமவாயத்தின் விருப்ப நெறிமுறையை அங்கீகரித்தல் வேண்டும் (புருனை)

7.8 ஆயுத வர்த்தக உடன்படிக்கையை பின்பற்றவும், அவ்வுடன்படிக்கைக்கான தேசிய சட்டங்கள் நிறைவேற்றவும் அணுவாயுத தவிர்ப்பு உடன்படிக்கையில் கையொப்பமிடுதலும் வேண்டும் (கவுத்தமாலா)

7.9 1951ம் ஆண்டின் அகதிகளின் அந்தஸ்த்து தொடர்பான சமவாயத்தையும் அதன் 1967ம் ஆண்டு நெறிமுறையையும் அங்கீகரித்தல் வேண்டும். (போர்த்துக்கல், சீரா லியோன்)

7.10 சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரோம் நியதிச் சட்டத்தை அங்கீகரத்தல் வேண்டும். (ஸ்லோவேனியா)

7.11 சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் ரோம் நியதிச் சட்டத்தை அங்கீகரித்தல் வேண்டும். (எஸ்டோனியா)

7.12 ரோம் நியதிச்சட்டத்தை பின்பற்றுவதோடு அதற்கு அமைவாக தேசிய சட்டத்தையும் நிறைவேற்றுதல் வேண்டும். (கொதமாலா)

7.13 சர்வதேச குற்றவில் நீதிமன்றத்தின் ரோம் நியதிச்சட்டத்தை அங்கீகரிப்பதோடு ரோம் நியதிச் சட்டத்தின் கீழ் உள்ள கடமைப்பாடுகளின் அடிப்படையில் நாட்டில் எல்லாச் சட்டங்களும் சீரமைக்கப்படுதல் வேண்டும். (லட்வியா)

7.14 சர்வதேச தொழில் நிறுவனத்தின் (ILO) 169ம் இலக்க ஆசிவாசிகள் மற்றும் பழங்குடியினர் பற்றிய சமவாயத்தை அங்கீகரிக்கவும் (கொதமாலா)

7.15 போர்க்குற்றம் மற்றும் மனிதத்துவத்துக்கு எதிரான குற்றங்களின் சட்ட வரையறைகளுக்குப் பயன்படத்தகாத சமவாயத்தை அங்கீகரித்தல் வேண்டும். (ஆர்மேனியா)

7.16 புதிய அரசியல் யாப்பில் அதிகாரங்களை வேறுபடுத்துதல் பற்றிய அடிப்படைக் கோட்பாடு தெளிவாகவும் வலுவாகவும் அங்கீகரிக்கப்படுவதையும் அதிகார நிறுவகங்களுக்கு இடையில் மட்டுப்பாட்டு, சமப்பாட்டு (Checks and Balances) விதிமுறைகள் ஏற்படுத்தப்படுவதையும் நீதித்துறையினதும் நீதிமன்றங்களினதும் சுதந்திரம் பாதுகாக்கப்படுவதற்கான உத்தரவாதத்தினையும் அத்தோடு புதிய அரசியல் யாப்பு வரைவின்போது எல்லா பங்குதாரர்களின் பங்கேற்றலையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதிசெய்தலும் வேண்டும். (ஹய்டி)

7.17 2016ம் ஆண்டு தயாரிக்கப்பட்ட புதிய தேசிய மனித உரிமைகள் செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்கு துரிதப்படுத்துவதற்கு பொறுப்பாக ஒரு அமைச்சை ஏற்படுத்துவது தொடர்பாக அவதானம் செலுத்தப்படுதல் வேண்டும். (ஐவரி கொஸ்ட்)

7.18 அரச யாப்பு சீர்திருத்தத்தில் எல்லா தனி நபர்களினதும் சம பாதுகாப்பையும், அவ்வாறான உரிமைகளுக்கும் அவர்கள் சமமாக நடத்தப்படுவதை உத்தரவாதப்படுத்துவதையும் உறுதி செய்தல் வேண்டும். (ஐவர் கோஸ்ட்)

7.19 பெண்களுக்கு எதிரான பாகுபாட்டை ஏற்படுத்தும் சட்டங்களையும், இணக்கப்பாட்டுடனான சம பாலியல் உறவுகளை குற்றமற்றதாக ஆக்குவதற்கு தேவையான சட்ட திருத்தங்களையும் மேற்கொள்ளுதல் வேண்டும். (அவுஸ்திரேலியா)

7.20 குற்றவியல் கோவைகளில் குறிப்பிட்டுள்ள 365 மற்றும் 365A பிரிவுகளில் திருத்தம் கொண்டு வருவதன் மூலம் இணக்கப்பாட்டுடனான சம பாலியல் உறவுகளை வைத்துக்கொள்வதையும் அவர்கள் தமது பாசத்தைக் காட்சிப்படுத்துவதையும் குற்றமற்றதாக்குதல் வேண்டும். (நெதர்லாந்து)

7.21 சமபாலியல் உறவுகள் குற்றமற்றதாக்குவதற்கு LGBT1 சமூகத்திற்கு எதிரான பாகுபாடுகளையும் வன்செயல்களையும் நிறுத்துவதற்கு உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளல் வேண்டும். (பிரேசில்)

7.22 குற்றவியல் சட்டக்கோவையின் 365 மற்றும் 365A ஆகிய பகுதிகளை நீக்குவதன் மூலம் சம பாலியல் உறவுகளை குற்றமற்றதாக்குதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கனடா)

7.23 சமபாலியல் உறவுகளையும் அவர்கள் தமக்கிடையிலான உறவுகளை காட்சிப்படுத்தலையும் குற்றமற்றதாக்குவதற்கு குற்றவியல் கோவையின் 365 மற்றும் 365A ஆகிய பகுதிகள் மாற்றப்படுதல் வேண்டும். (சுவீடன்)

7.24 சமபாலுடைய நபர்களுக்கிடையில் இணக்கத்துடனான பாலியல் நடத்தைகளை குற்றமற்றதாக்கும் வகையில் குற்றவியல் கோவையை மாற்றுவது, LGBT1 சமூகத்தினருக்கு எதிராக இழிவாக பேசுவதை ஒடுக்குதல் மற்றும் பொலிஸ் அதிகாரிகளினால் அவர்கள் துஷ்பிரயோகப்படுத்தப் படுவதையும் துன்புறுத்தப்படுவதையும் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். (உருகுவே)

7.25 இணக்கப்பாட்டுடனான சம பாலியல் உறவுகளை குற்றமற்றதாக்குவதற்கும் பால் நிலை அடையாளம் மற்றும் மாறுபட்ட தன்மையான பாலியல் உறவுகள் வைத்திருப்பவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் பாகுபாடுகளையும், வன்முறைகளையும் இல்லாமல் செய்வதோடு LGBT1 நபர்களுக்கு சுகாதார சேவைகளை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு உத்தரவாதப் படுத்தப்படல் வேண்டும். (ஹொன்டுராஸ்)

7.26 சர்வதேச சட்டத்துக்கு அமைவாக வெறுப்புணர்வுகளையும், வன்செயல்களையும் தூண்டி விடுபவர்களையும் அவற்றில் ஈடுபடுபவர்களையும் நீதியின் முன் நிறுத்தப்படுவதை உறுதி செய்தவதோடு, அவ்வகையான குற்றங்கள் புரிந்தவர்களை தண்டனை பெறுவதிலிருந்து பாதுகாக்கும் செயற்பாடுகள் நிறுத்தப்படல் வேண்டும். (சுவீடன்)

7.27 பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படுவதும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சட்டம் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுவது உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும். வரையப்படுகின்ற புதிய பயங்கரவாத விரேலத சட்டம் சர்வதேச மனித உரிமைகளின் தராதரங்களுக்கு அமைவாக உருவாக்குவது உறுதிசெய்யப்படல் வேண்டும். (கனடா)

7.28 மரணதண்டனையை இல்லாதொழிக்கப்படல் வேண்டும் (அவுஸ்திரேலியா)

7.29 மரண தண்டனையை இல்லாதொழிக்க காத்திரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளல் வேண்டும். (நோர்வே)

7.30 மரண தண்டனைக்காக வழங்கப்பட்ட தீர்ப்பை நிறைவேற்றாமல் நிறுத்தி வைத்திருக்கும் தற்போதைய நிலைமையை திட்டவட்டமாக மரண தண்டனை வழங்குவதை இல்லாதொழிக்கும் முடிவுக்கு மாற்றப்படல் வேண்டும். (போர்த்துக்கல்)

7.31 மரண தண்டனை வழங்கப்படுவது இல்லாதொழிக்கப்படுவதோடு மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளவர்களின் தண்டனையை நிறைவேற்றுவதை நிறுத்திவைப்பதற்கும், மரண தண்டனை வழங்கப்பட்டு சிறையில் உள்ள எல்லோரினதும் தண்டனையை சிறைத்தண்டனையாக மாற்றுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். (ஸ்லோவாக்கியா)

7.32 மரண தண்டனை வழங்குவதை இல்லாதொழிப்பதோடு ஏற்கனவே மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளவர்களின் தண்டனையை சிறைத்தண்டனையாக மாற்றுதல் வேண்டும். (ஹொலி சீ)

7.33 1975 முதல் மரண தண்டனை விதிக்கப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா கைதிகளினதும் மரண தண்டனை நிறைவேற்றப்படாமையை அவதானத்தில் கொண்டு மரண தண்டனையை இல்லாதொழிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். (நமீபியா)

7.34 சட்ட ரீதியாகவும் செயல்முறை ரீதியாகவும் தடுத்துவைக்கப்பட்டுள்ள எல்லோருக்கும் அடிப்படையான சட்ட ரீதியான பாதுகாப்பு வழங்கப்படுவதை உறுதி செய்தல் வேண்டும். (ஹோலி சீ)

7.35 காணாமல் போயுள்ள நபர்களின் முழுமையான பெயர்ப்பட்டியலை வெளியிடுதல் வேண்டும் (சுவிட்சலாந்து)

7.36 குற்றவாளிகள் தண்டனையை அனுபவிப்பதிலிருந்து விளக்களிக்கப்பட்டு பாதுகாக்கப்படும் (ஐஅிரவைல) நடைமுறையை இல்லாதொழிப்பதை இலக்காகக் கொண்டு போர்க்குற்றங்களையும் உள்ளக முரண்பாடுகளின்போது புரிந்த ஏனைய குற்றங்களையும் விசாரணை செய்து குற்றம் இழைத்தவர்களுக்கு எதிராக சட்ட ரீதியான வழக்குகள் தொடரப்படுவதை உறுதி செய்வதற்காக முழுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். (எஸ்தோனியா)

7.37 உண்மையை கண்டறியும் ஆணையத்தையும், நட்டஈடு தொடர்பான செயலகத்தையும், பாரிய மனித உரிமை மீறல்கள் தொடர்பான சம்பவங்களை விசாரணை செய்வதற்கான விசேட நீதிமன்றம் ஒன்றை ஸ்தாபிப்பதற்கும் கால அட்டவணையை முடிவு செய்து இது தொடர்பான நடைமுறையை துரிதப்படுத்துதல் வேண்டும். (கொரிய குடியரசு)

7.38 நிறைவேற்று நீதியின் நடைமுறையினநான்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறிமுறைகளையும் செயற்படுத்துவதற்குத் தேவையான நிதிவழங்கலையும் அதிகரிக்கக் கூடியதாகவும். தேசிய வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கி திட்டவட்டமாக ஆணையுடன் நிபுணர்களை நியமித்து முன்னோக்கி நகர்வதற்கான காத்திரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். (முன்னைய யுக்கோஸ்லோவிய குடியரசின் மெகடோனியா)

7.39 மனித உரிமைப் பேரவையின் 30/1 தீர்மாணத்தை முழுமையாக செயற்படுத்த தேவையான கால அட்டவணையையும், மட்டக்குறியினையும் (டீநநெஉாஅயசம) அபிவிருத்தி செய்தல் வேண்டும். (ஜெர்மனி)

7.40 மனித உரிமைப் பேரவையின் 30/1 தீர்மாணத்தை முழுமையாக செயற்படுத்த தேவையான கால அட்டவணையையும் மட்டக்குறியினையும் (டீநநெஉாஅயசம) அபிவிருத்தி செய்தல் வேண்டும். (நோர்வே)

7.41. மனித உரிமைப் பேரவையின் 30/1 தீர்மாணத்தை மீதுள்ள கடமைப்பாட்டை முழுமையாக செயற்படுத்த தேவையான தங்குதடையின்றிய கால அட்டவணையையும், அதனுடன் சேர்த்து கண்காணிப்பு பொறிமுறையையும அபிவிருத்தி செயதல் வேணடும். (முன்னைய யுக்கோஸ்லோவ் குடியரசின் மெசடோனியா)

7.42. மனித உரிமைப் பேரவையின் 30/1 தீர்மாணத்தை தொடர்பான கடைமைப்பாட்டின் அடிப்படையில், முழுமையாக செயற்படுத்த தேவையான நிலைமாற்று நீதிக்கான பொறிமுறை உட்பட, அதற்கான தெளிவான கால அட்டவணையையும் ஸ்தயபித்தல் வேண்டும். (ஆஸ்திரியா)

7.43. மனித உரிமைப் பேரவையின் 30/1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்மானத்தை முழுமையாக செயற்படுத்த தேவையான கால அட்டவணையையும் மட்டக்குறியினையும் (Benchmark) அபிவிருத்தி செய்தல் வேண்டும். (டென்மார்க்)

7.44. காணாமற் போனவர்கள் தொடர்பான செயலகத்தை செயற்படுத்துவது, சிவில் நடவடிக்கைகளில் இராணுவத்தினரின் தலையீட்டை நிறுத்துவது, (இராணுவம் கைப்பற்றிய) காணிகளை அதன் உரிமையாளர்களிடம் மீண்டும் ஒப்படைப்பது, வெளிநாட்டு விசாரணையாளர்கள், வழக்கு தொடுனர்கள், நீதிபதிகள் ஆகியோரின் பங்குபற்றலுடனான சட்டப்பொறிமுறைகளை ஸ்தாபிப்பது உட்பட மனித உரிமைப் பேரவையின் 30/1 தீர்மானத்தை துரிதமாக செய்வதனூடாக மீளிணக்பாட்டை வளர்த்தல் வேண்டும் (கனடா)

7.45. பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கிவிட்டு அதற்கு பதிலாக சர்வதேச ரீதியல் சிறந்த செயற்பாடுகளைக் கொண்ட சட்டத்தை ஏற்படுத்துவது உட்பட மீளிணக்கப்பாடு தொடர்பான மதியுறை செயலணியின் பரிந்துரைகளையும் முழுமையாக செயற்படுத்துதல் வேண்டும். (அவுஸ்திரேலியா)

7.46. ஊடகவியலாளர்களையும், மனித உரிமைக்காப்பாளர்களையும் பாதுகாப்பதற்கும், அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் அச்சுருத்தல்கள் மற்றும் வன்செயல்களை நிறுத்துவதற்கும் அவ்வகையான சம்பவங்களை பயனுள்ள வகையில் விசாரனை செய்து குற்றமிழைத்தவர்களை தண்டிப்பதற்கும் ஏதுவான வகையில் தேசிய கொள்கை ஒன்றை தாபித்தல் வேண்டும். (ஆஸ்திரியா)

7.47. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் பொதுமக்களின் பாவனைக்காக பெரிய அளிவிளான காணிகள் மாற்றப்படுவது தொடர்பான அவதாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொள்ளப்பட வேண்டும் (கானா)

7.48. சர்வதேச சட்டத் தராதரங்களில் காணப்படுவது போன்று நீண்டகாலமாக புலம்பெயர்ந்துள்ளவர்களினதும், அகதிகளினதும் சட்ட ரீதியான உரிமைகளையும் சொத்துக்களை அவர்களிடம் ஒப்படைப்பதையும் உறுதி செய்வதற்கான முயற்சிகள் தொடரப்படல் வேண்டும். (ஹோலி சீ)

7.49. அரச யாப்பின் 16ம் உறுப்புரையை நீக்குவது அல்லது 'திருத்துவதன் மூலம் மற்றும் எல்லா பிரத்தியோக சட்டங்களை திருத்துவதன் மூலமும் பெண்களுக்கு எதிரான பாகுபாடான அம்சங்களையும் அவர்கள் அரசியலில் ஈடுபடுவதற்கான தடைகளையும் நீக்கப்படுதல் வேண்டும். (கனடா)

7.50. திருமணம் சார்ந்த பாலியல் வல்லுறவை குற்றமாக்குவது உட்பட பெண்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் எல்லா விதமான வன்செயல்களையும் இல்லாதொழிப்பதற்கான நடவடிக்கைகள் வலுப்படுத்தப்படல் வேண்டும் (பெல்ஜியம்)

7.51. குடும்ப வன்முறைகளையும், திருமண பாலியல் வல்லுறவுகளையும் தெளிவாக தடைசெய்யக் கூடிய வகையில் விசேடமான சட்டங்கள் இயற்றப்படுவதோடு, அது கடுமையாக செயற்படுத்தப்படுவதையும், அமுலாக்கப்படுவதையும் உறுதி செய்தல் வேண்டும். (ஸ்லோவேனியா)

7.52. பாலியல் வல்லுறவின் மூலம் ஏற்பட்ட கருவை இல்லாமல் செய்தல், குடும்ப உறவினர்களால் மேற்கொள்ளப்பட்ட முறையற்ற பாலியல் உறவினால் ஏற்பட்ட கருவை இல்லாமல் செய்தல் மற்றும் வலிமை இழந்த கருவை சிதைத்தல் போன்ற சம்பவங்களை குற்றமற்றதாக்குவதற்கும் அவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பான தண்டனை வழங்கும் நடவடிக்கைகளை இல்லாதொழிப்பதற்காகவும் ஏதுவான வகையில் குற்றவியல் கோவை திருத்தப்படல் வேண்டும். (டென்மார்க்)

7.53. அகதிகள் அந்தஸ்தை தீர்மாணிப்பதற்கான தேசிய நடைமுறையை ஸ்தாபிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் (ஆர்ஜன்டீனா)

8. இவ்வறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ள முடிவுகள் மற்றும் ∴ அல்லது பறிந்துரைகள் முன்மொழிந்த அரசுகளின் நிலைப்பாடுகளை பிரதிபலிப்பதோடு மீளாய்விற்கு உட்பட்டுள்ள அரசின் நிலைப்பாடுகளையும் பிரதிபலிக்கின்றது. இவ்வறிக்கை செயற்பாட்டுக் குழுவினால் முழுமையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக கொள்ளல் ஆகாது.

## III. தன்னிச்சையாக வழங்கப்பட்ட உறுதிகள் மற்றும் கடமைப்பாடுகளும்

9. முன்னெடுக்கப்பட்டுள்ள அரச யாப்பு சீர்த்திருத்த நடைமுறைகள் எல்லாத் தரப்பினரையும் உள்வாங்கியதாகவும், சமத்துவம் மற்றும் பாகுபாடின்மை, அதிகாரங்கள் பிரிக்கப்பட்டதாகவும், மட்டுப்பாட்டு சமபாட்டு வழிமுறைகள் மற்றும் சட்டத்துறையின் சுதந்தரம் போன்ற அடிப்படையில் கோட்பாடுகள் அவதானத்தில் கொண்டுள்ளமைக்கான உறுதி.

10. தகவல்களை அறிந்துகொள்வதற்கான உரிமையை நிறைவேற்றுவதற்காக தகவலறியும் சட்டத்திற்கு உட்பட்ட எல்லா அரச நிறுவனங்களுக்கும் பயிற்சியளிக்கப்பட்ட தகவல் உத்தியோகத்தர்களையும் மற்றும் பெயரளிக்கப்பட்ட உத்தியோகத்தர்மளையும் நியமிப்பதற்கான உறுதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. சித்திரவதைகள் கொடூரமான, மனிதாபிமானமற்ற, இழிவுபடுத்தும் நடத்துகை அல்லது தண்டனை வழங்கும் சமவாயத்தின் விருப்புப் பொறிமுறையை ஏற்றுக்கொண்டு அச்சமவாயத்தின் கடமைப்பாடுகளை நிறைவேற்றுவதில் தேசிய தவிர்ப்பு மற்றும் கண்காணிப்பு பொறிமுறையாக தேசிய மனித உரிமை ஆணையத்தை நியமித்தல்.

12. பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை மீளாய்வு செய்து நீக்குவதோடு அதற்கு பதிலாக சர்வதேச மனித உரிமை சட்டங்களின் தராதரங்களுக்கு அமைவாக புதிய பயங்கரவாத விரோத சட்டத்தை ஏற்படுத்தல்.

13. பால்நிலைத் தொடர்பான பரிவுள்ள நீதி முறையை உறுதி செய்யக் கூடிய வகையில் பொலிஸ் பிரிவுகளிலும் பெண்கள் மற்றும் சிறுவர் பணிமனையினதும் மற்றைய பிரிவுகளிலும் ஆட்பலத்தின் வலுவை அதிகரித்தல்.

14. மாகாண மற்றும் உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை உத்தரவாதப்படுத்துவதற்கான சட்டத்தை தயாரித்தல்.

15.**LGBTI** சமூகத்தினர் உட்பட எல்லா நபர்களினதும் அடிப்படை உரிமைகளுக்கான கௌரவத்தை வலுப்படுத்துதல் தொடர்பாக மேலெழுந்துள்ள கரிசனைகளுக்கான தீர்வுகளை உறுதி செய்தல்.

16. உள்நாட்டில் புலம்பெயர்ந்துள்ளவர்கள் உட்பட ஆயுத முரண்பாட்டினால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு நட்ட ஈட்டை வழங்குவதற்கு வழிகாட்டுவதற்கான ஒரு முழுமையான நட்டஈட்டுக் கொள்கையை தயாரித்தல்.

17. வெளிநாடுகளில் சமாதானத்தை பேணும் நடவடிக்கைகளுக்காக தெரிவு செய்யப்படும் பாதுகாப்புப் படை நபர்கள் தேசிய மனித உரிமை ஆணையத்தின் பங்கேற்றலுடன் முழுமையான நடைமுறை மூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசாரணை செய்யப்பட்டு அவர்களின் நன்நடத்தை உறுதிப்படுத்தப்படல் வேண்டும்

18. காணாமற் போனவர்கள் பற்றிய செயலகத்தை செயற்படுத்துவது, உண்மையை கண்டறியும் ஆணையத்தை ஸதாபிப்பது, நட்டஈடு வழங்குவதற்கான செயலகம் ஒன்றை அமைப்பது, விசேடமான மதியுலைஞர்களைக் கொண்ட சட்ட பொறிமுறையை ஏற்படுத்துவது போனற செயற்பாடுகளைக கொண்ட வகையில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவையின் தீர்மானத்தில் உள்ளடக்கப்படடுள்ள கடமைப்பாடுகளை பூர்த்தி செய்தல்.

19. கிராம சக்தி மக்கள் இயக்கம் உட்பட தேசிய மட்ட முன்னெடுப்புகளில் வறுமை ஒழிப்பு தொடர்பான தங்குதிறன் கொண்ட அபிவிருத்தி இலக்கை அடைவதற்கான நோக்கம் பேணப்படல்.

20. அங்கவீனமுடைய நபர்களின் உரிமைகள் தொடர்பான சமவாயத்தின் சரத்துக்களை நாட்டின் சட்டத்துக்குள் ஒன்றிணைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Annex

## இலங்கை தூதுக் குழுவின் கட்டமைப்பு

இலங்கை அரசாங்கத்தின் சார்பில் சென்ற தூதுக் குழுவின் தலைமை தாங்கியவர் பாராளுமன்ற உறுப்பினர், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சர் கலாநிதி ஹர்சத சில்வா அவர்கள். குழுவின் ஏனைய உறுப்பினர்கள் கீழ்க் காணப்படும் வகையில்.

- பிரசாந் காரியவசம்,
  செயலாளர்,
  வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு.

- எச்.ஈ. ரவிநாத் ஆரியசிங்க,
  ஐக்கிய நாடுகள் சபையின் ஜெனிவாவின்
  இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி.

- நெரின்புள்ளே அவர்கள்,
  பிரதி சொலிஸ்டர் ஜனரால்,
  சட்டமா திணைக்களம்.

- சமஸ்த ஜயசிங்க,
  ஜெனீவாவின் இலங்கைக்கான வதிவிட உதவி பிரதிநிதி.

- மஹேசினி கொலன்னே,
  பணிப்பாளர் US / UN கனடா,
  வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு

- சன்திமா விக்ரமசிங்க,
  சனாதிபதி சிரேட்ட உதவி செயலாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கிஹான் குணதிலக,
  வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் ஆலோசகர்.

- சிசகா சோமரத்ன,
  அமைச்சின் ஆலோசகர்,
  ஜெனீவாவின் இலங்கைக்கான வதிவிட குழு.

- மௌசா லாபீர்,
  முதல் நிலை செயலாளர்,
  ஜெனீவாவின் இலங்கைக்கான வதிவிட குழு.

- துல்மினி தாநாயக,
  இரண்டாம நிலை செயலாளர்,
  ஜெனீவாவின் இலங்கைக்கான வதிவிட குழு.

- நெத்மினி மெதவல,
  ஆய்வு மற்றும் தொடர்பாடல் உதவியாளர்,
  வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூகோளகால
# மீளாய்வின் சிபாரிசுகள்
# 2017

Organized by :
Civil Society Groups in Sri Lanka
and UPR-Info, Geneva

CSCS

Civil Society Collective in Sri Lanka

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org